போர்வாள்

திராவிடர் வாழ்வு வெளியீடு…

வாள்	திருவள்ளுவர் ஆண்டு 1979 வைகாசி 7	வீச்சு
1	20-5-48 வியாழக்கிழமை	39

ஆசிரியர்கள்:

1½ அணா

தூத்துக்குடி மாநாட்டில்

இவர் படத்தை ★ இவர் திறந்தார்

மாநாட்டு இதழ் விலை அணா 2.

வேலை நிறுத்தம்—பிரச்சினையைத் தீர்க்குமா

தூத்துக்குடி மாநாட்டில் பெரியார்

தலைவர் பெரியார் அவர்கள் தூத்துக்குடி மாநாட்டில் பேசுகையில் வேலை நிறுத்தம் என்பது பற்றிக் குறிப்பிட்டதாவது :—

இப்போது நாட்டின் பல பகுதிகளிலும் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. பஸ் தொழிலாளர்களும் டிராம் தொழிலாளர்களும் ரயில் தொழிலாளர்களும் மில்தொழிலாளர்களும் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு வேலை நிறுத்தம் செய்தவண்ணம் உள்ளனர். இப்போதுகூட இந்த, தூத்துக்குடியில், திரண்டு

குழுமியுள்ள நம ஏராளமான பேருக்கும் திரும்பிப் போக வழி இல்லாத படியான நிலையில் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் ஒன்று நடந்துகொண்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதகாலமாகவே கோவையில் பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தமும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த வேலை நிறுத்தங்கள் உண்மையிலேயே தொழிலாளர் குறைகளைத் தீர்க்குமா? இந்த வேலை நிறுத்தங்களால் மட்டுமே தொழிலாளர்கள் தாங்கள் அநுபவித்து வரும் குறைபாடுகள் அனைத்தும் தொலைந்து, இழிவுகள் தீர்ந்து, துக்கம் குறைந்து, கவலைகள் மறைந்து, இன்பப் புதுவாழ்வு வாழ முடியுமா? முடியும் என்று உறுதியிட்டுக் கூற என்னால் முடியவில்லை.

வேலை நிறுத்தங்களால் ஏதோ ஓரளவிற் கூலி உயரும், உயர்கிறது, உயர இடமிருக்கி என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆ எந்த அளவுக்குக் கூலிஉயர்கிறதோ அதை அதிகமான அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்து கின்றனவே! உயர்ந்து விடும்படி முதலாளிக அந்த முதலாளிகளை ஒட்டி வாழும் இன் முதலாளித்வ சர்க்காரும் செய்து விடுகின்றன இவர்கள் இப்படிச் செய்வதால், இந்த வே நிறுத்தங்களும், வேலை நிறுத்தங்களால ஏற் கூலி உயர்வுகளும் பயன் அற்றுப்போய்விடு றனவே என்பது தான் என்னுடைய கவலை, மூ றணாவாக இருக்கிற கூலி வேலை நிறுத்தத் ஆறணாவாக உயர்ந்து விட்டது என்று வைத் கொண்டால், மூன்றணா விற்ற கத்தரிக்காயும் ணாவாக விலை ஏறிவிட்டால் கஜம் துணி 10 அ வாக இருந்தது ரூ. 1-4-0 ஆகஏறிவிட்டால், அ படி 8 அணா இருந்தது 1 ரூபாயாக உயர்ந்து டால் பெயரளவுக்கு கூலி 3 அணாவிலிருந் அணாவாக உயர்ந்துவிட்டது என்றாலும் உண் யில் அது பழைய மூன்றணாவாகவே இருக்கி என்று தானே பொருள்? இப்படிப்பட்ட து பாக்கியமான நிலை ஏற்படத்தான் வேலை நிறுத் கள் பயன் படுகின்றன என்றால், வேலை நிறுத் களை எப்படி நாம் தக்க பரிகாரம் என்று ஏற்றுக் கொள்ளமுடியும்?

என்னைப் பொறுத்தவரையில் நான் கரு தெல்லாம் வேலை நிறுத்தங்களால் தொழிலா நிலைமையை உயர்த்துவது என்பதைவிட தொ லாளி என்ற ஒரு வகுப்பும் முதலாளி என்ற வகுப்பும் தனித்தனியே இருப்பதை அடியே இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டு மனித தாயம் என்ற ஒரே வகுப்பை ஏற்படுத்துவ சிறந்தது என்பதுதான்.

எப்படி நம் சமுதாயக் குறைபாடுகள் நீ வேண்டுமானால் சூத்திரன் என்ற ஒரு சாதி பஞ்சமன் என்ற ஒருசாதியும் பார்ப்பனன் எ ஒரு சாதியும் இருக்கக் கூடாது—எல்லா சா ளும் ஒழிந்து மனிதன் என்ற ஒரே சாதி இரு வேண்டுமோ, அப்படித்தான் நம் பொருளா மேடுபள்ளம் தொலைய வேண்டுமானால், முதல தொழிலாளி என்கின்ற தனித்தனி வகுப்

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

இன்பத் திராவிடமே எமது இலட்சியம்!

தூத்துக்குடியில் திராவிடர் துந்துபி!

"இல்லை, இல்லை, முடியாது!"

"முடியாது!"
"முடியாது!"
"நான் முடியாது!"
"நான் முடியாது!"
"நான் முடியவே முடியாது!"
"நான் முடியவே முடியாது!"
"நீங்கதான்"
"நீங்கதான்"
"நீங்கதான் சார்"
"நீங்களேதான் சார்."
"சொன்னு கேளுங்க சார்!"
"நீங்க கேளுங்க சார்!"
"நான் முடியாது. நீங்கதான் நான் சொல்றபடி கேக்கணும்."
"இல்லை, இல்லை, முடியாது! நீங்கதான் நான் சொல்றபடி கேக்கணும்!"

சண்டை பலமாக நடந்துகொண்டிருந்தது. ஓடிவந்த நான் உள்ளே நுழைந்தேன், மேல் மூச்சு வாங்க வாங்க. ஒரு கையில் தூத்துக்குடிக்கு வாங்கிய ரயில் டிக்கட், ஒரு கையில் இரண்டு பெட்டிகள், இரண்டு கருஞ் சட்டைகள், ஒரு உணவுப் பொட்டலம், இவை மூன்றும் கொண்ட ஒரு தூக்குப் பை, காலில், நான் இருக்கட்டுமா போகட்டுமா என்று பாதத்துடன் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்த நடையன்கள். வாரி விடப்பட்ட தலையோ கலைந்து கலைந்து பல கோணங்களில் 'பரத நாட்டியம்' ஆடிக்கொண்டிருந்தது. இந்த அலங்கோலமான நிலையில் வேகமாக ஓடிவந்த நான், அந்த ரயில் வண்டியில், தூத்துக்குடி பெட்டியில், நுழைந்ததும் நுழையாததுமாக ஒரு சண்டை நடக்கக் கண்டால் எப்படி இருக்கும்?

நிமிர்ந்து பார்த்தேன். இருவரும் கருஞ் சட்டை அணிந்து கொண்டிருந்தனர். சுற்றிலும் வரிசை வரிசையாக கருஞ் சட்டை வீரர்கள் அமர்ந்திருந்தனர். இடையில், ஒரு ஆள் உட்காருவதற்கான ஒரே ஒரு இடம் காலியாக இருந்தது. அந்த இடத்திற்கு முன்னால் நின்று கொண்டுதான், இருவரும், 'வாய்ச் சண்டை' போட்டுக்கொண்டிருந்தனர். எனக்கு ஒரே விநாடியில் நிலைமை புரிந்துவிட்டது! இருவரும் அந்த இடத்தில், தான்தான் உட்கார வேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றனர்! அதுதான் சண்டைக்குக் காரணம்!

"சரி! சரி! இனியும் சும்மா இருப்பது ஆபத்து! வாய்ச்சண்டை முற்றி கைச் சண்டை தொடங்கினாலும் தொடங்கக் கூடும்" என்று எண்ணி, அவர்களை சமாதானப் படுத்தத் தொடங்கினேன். முதலில் ஒன்றும் தெரியாதவன்போல, "என்ன சங்கதி ஏன் சண்டை பிடிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அவர்கள் சொன்னபதில் என்னைத் தூக்கிவாரிப்போட்டது. திடுக்கிட்டு, கற்சிலையென அசையாது நின்றுவிட்டேன் நான். என்ன ஆச்சரியம்!

ஒருவர் சொன்னார்:

"இந்த அக்ரமத்தைக் கேளுங்க சார். இவரோ வாலிபர். இளங்காளை. கல்லூரி மாணவர். இப்போதுதான் பரீட்சை எழுதி முடித்திருக்கிறார். அதற்காக வேறு மாதக் கணக்கில் கண் விழித்துப் படித்திருக்கிறார். இப்போது, தூத்துக்குடிக்குப்போகிறார். இந்த வண்டியோ இன்று இரவெல்லாம் ஓடி, நாளை பகலெல்லாம் ஓடி, நாளை மாலை ஐந்து மணிக்குமேல்தான் தூத்துக்குடிக்குப் போய்ச்சேரும். அதுவரை நின்றுகொண்டே வரப் போகிறாராம். உட்கார் என்றால் முடியாது என்கிறார்! என்ன அக்ரமம் பாருங்கள்."

மற்றவர் சொன்னார்:

"இவர் சொல்றதை நம்பாதிங்க சார். நான் பரீட்சைக்குக் கண் விழித்துப் படிக்கவுமில்லை ஒண்ணுமில்லை. பரீட்சை காலத்தில் நான் படிக்கிற வழக்கமே கிடையாது. நான் சுத்த சோம்பேறி. இவர் வயதானவர். பெரியவர். உடல் தளர்ச்சியுற்ற நிலையில் இருப்பவர். இவர் உட்கார்ந்து வருவதுதானே நியாயம். இவரை நிற்க வைத்துவிட்டு நான் உட்கார்ந்துவருவதாம். சொல்கிறார் சார் இவர்! நியாயமா? நீங்கதான் சொல்லுங்க சார். நியாயமா?"

இவர் அவரை உட்காரச் சொல்கிறார் அவர் உடல் நலனை முன்னிட்டு. அவர் இவரை உட்காரச் சொல்கிறார் இவருடைய நன்மையை முன்னிட்டு! ஒற்றுமை என்றால் இதுவல்லவோ ஒற்றுமை!

2. வண்டி புறப்பட்டது!

நான் "சமாதானம்" சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் வண்டியும் புறப்பட்டுவிட்டது "சென்னப்பட்டணம் எழும்பூர் ஸ்டேஷன்" (அங்கே இருக்கிற பலகையில் அப்படித்தான் எழுதி இருக்கிறது) எங்களைவிட்டுப் பின்னால் நகர ஆரம்பித்தது. (அதாவது நாங்கள் ஏறி இருந்த இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ் முன்னால் போக ஆரம்பித்தது!)

வண்டி புறப்பட்டதோ இல்லையோ, அந்த எழும்பூர் நிலையம் அதிர எழுந்தது இடி முழக்கம் திராவிடநாடு திராவிடருக்கே என்று! பெட்டிக்குப் பெட்டி கருப்புக் கொடிகள் வெளியே வந்து பறக்கலாயின. வண்டியின் சுவர்களில் எல்லாம் பெரியார் வாழ்க எனும் எழுத்துகள் திடீர் திடீரெனத் தோன்றலாயின! பார்க்கும் இடமெங்கும் கருப்புச் சட்டைகள் பளிச் பளிச் என மின்னலாயின. புதிய புதிய இலட்சியச் சொற்கள் ஓங்கி முழங்கி வண்டியை வளைக்கலாயின். 'சுதந்தரத் திராவிடத்தில், சுதந்தரத்தின் சுவை உணர்ந்த திரா

விடத்துச்சேய்களையெலாம்ஏற்றிக் கொண்டு,திராவிட அரசாங்க ரயில் கம்பீரமாக ஓடுவதுபோல் இருந்தது அன்று இண்டோ—சிலோன் எக்ஸ்பிரஸ் ஓடிய காட்சி!

ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன், திராவிடர், அணி அணியாகத் திரண்டு வந்தனர். கூட்டம் கூட்டமாக வண்டிக்குள் நுழைந்தனர். கும்பல் கும்பலாக அங்கங்கே தொத்திக் கிடந்தனர். உட்காரும் இடம் என்ற பூலோகம் எழும்பூரிலேயே அளவுக்குமேல் மக்களால் நிரம்பி விட்டபடியால், மற்ற ஸ்டேஷன்களில் ஏறிய மக்கள் எல்லாம் உட்காரும் இடத்திற்குக் கீழே உள்ள "பாதாள லோகத்"திலும், சாமான்களை வைக்க என்றுள்ள "மேல் உலக"த்திலும், ஜன்னல்கள் என்ற "திரிசங்கு சொர்க்கத்"திலும், 'புட் போர்டு' (Foot Board) என்று தவருக அழைக்கப்படும் "எமலோகத்"திலும் வண்டியின் கூரைக்கும் மேலே உள்ள வெறும் பாழிலும் (வெறும் பாழ்—சித் அம்பரம் — ஆண்டவனை வேதாந்திகளும் சித்தாந்திகளும் காணும் மோன வெளி!) இன்னும் அவரவர்கள் அறிவுக்கும் திறமைக்கும் எட்டிய புதுப்புது இடங்களிலும் இடம் தேடிக்கொண்டனர். உட்கார்ந்தவர்கள், நின்றவர்கள், தொங்கியவர்கள், நடனமாடியவர்கள், (ஒத்தைக் காலில் நின்று கொண்டு!), தொத்திக்கிடந்தவர்கள், தாண்டிப் பதுங்கியவர்கள் (மூட்டைகளுக்குக் கீழே), அரியாசனம் ஏறியவர்கள் (மூட்டைகளுக்கு மேலே!) உயிருடன் பேரம் பேசிக்கொண்டிருந்தவர்கள் (வண்டிக்கு வெளியே ஊசலாடிக் கொண்டு!) என்று இவ்வண்ணம் பலர், பலவிதமான தன்மையினராய், நிலையினராய், இடத்தினராய், வண்டிக்கு உள்ளேயும் வெளியேயும் மேலேயும் பயணம் செய்யலாயினர்.

3. "தூத்துக்குடி எப்ப ஏலே!"

தாம்பரம், செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், கடலூர், சிதம்பரம், மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் என்று ஒவ்வொரு சந்திப்பாக, ரயில் தாண்டிக் குதித்தது. திருச்சினுப்பள்ளி ஜங்ஷன் வருவதற்கும் பொழுது விடிவதற்கும் சரியாய் இருந்தது. பொன்மலையிலும் திருச்சியிலும் பாட்டாளிகளின் பட்டாளம் எங்கள் வண்டியை நோக்கிப் படையெடுத்தது. வரும்போதே, அப் பட்டாளம், அடைந்தே தீருவோம் என்று உரத்த குரலில் கூவிற்று. ஆம்! திராவிட நாட்டை என்று எதிரொலி செய்தது வண்டிக்குள் இருந்த வீரர்தம் கூட்டம். ஒலியும் எதிரொலியும் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டிருந்த நேரத்தில் வண்டி புறப்பட்டது. இப்போது வண்டியின் பெயர் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்! நாங்கள் திருச்சி ஜங்ஷனில், **குமரி இத் தெற்கிலும், வங்கம் வடக்கிலும், கொட்டும் திரைக் கடல் மற்றிரு பாங்கிலும் அமையக் கிடந்த திராவிடநாட்டினை ஆண்டவன் — ஆளப்பிறந்தவன் — நீ விரைந்து முன்னேறு**" என்ற பாரதிதாசனின் பண் பாடிக்கொண்டிருந்த நேரத்தில், எங்களையும் அறியாமல், நாங்கள் ஏறிவந்த பெட்டி, இண்டோ சிலோன் எக்ஸ்பிரசை ஒழித்துக்கட்டிவிட்டு, தூத்துக்குடி எக்ஸ்பிரசுடன் தன்னை இணைத்துக் கொண்டுவிட்டதாம்! பிறகு, சொன்னார்கள்!

"வண்டியின் பெயர் கிடக்கட்டும் எதுவாச்சும்! தூத்துக்குடி எப்ப ஏலே!"—ஒரு குரல் கேட்டது! தூத்துக்குடி பாஷை! யாரோ தூத்துக்குடி கருஞ்சட்டைத்தோழர் —வெளியூரில் இருந்தவர்—மாநாட்டிற்காகத் திரும்பி வருகிறார்போல் இருக்கிறது. அவர் கேட்டார் இது போல, பக்கத்திலிருந்த தம் பொடியனைப் பார்த்து! (பொடியன் என்றால் தூத்துக்குடி மொழியில் சிறுவன் என்று அர்த்தம்).

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் திருச்சி சந்திப்பை விட்டுப் புறப்பட்டதும் ஒவ்வொருவர் உள்ளமும் எப்போது தூத்துக்குடி வரும், எப்போது வண்டியை விட்டு இறங்கலாம், எப்போது மாநாட்டுத் தொண்டர்கள் நம்மை வரவேற்பார்கள், எப்போது வ. உ. சி. மைதானம் போகலாம், எப்போது மாநாடு தொடங்கும், எப்போது பெரியார் பேருரையைக் கேட்கலாம் என்று எண்ணி எண்ணி ஏங்கலாயிற்று. அனைவர் சிந்தனையும் மாநாடு என்ற அந்த மூன்று எழுத்துக்களையே சுற்றிச் சுற்றி வட்டமிடலாயின, மலரைச் சுற்றி வரும் தேன் வண்டுகளைப்போல!

4. அதோ கொடி பறக்குது, பா

மணப்பாறை, அய்யலூர்
வையம் பட்டி, வடமதுரை, தா
ரைப்பட்டி, திண்டுக்கல், கொடை
கானல் ரோடு, ஒவ்வொன்றும்
தூத்துக்குடி எக்ஸ்பிரசுடன் கை
குலுக்கிய பிற்பாடு சோழவந்தா
வந்தான், கொடி ஏற்றினன் எ
சின்மீது, கம்பீரமாக நின்றான்
ஆம்! சோழவந்தான் ஸ்டேஷனி
அவ்வூர்த் தோழர்கள், பெரி
தோர் கருப்புக் கொடியை அந்த
பிரம்மாண்டமான 'இஞ்சின்' மீ
ஏற்றினர். சுற்றி உள்ள கருப்
நிறம் திராவிடர்தம் இன இழிவை
உணர்த்தி வர, நடுவே உள்
சிகப்புவட்டம் அந்த இழிவை
ஒழிக்க திராவிடர் பட்டாள
திரண்டு நிற்கிறது என்பதை
குறித்துவர, அந்தக் கருஞ்சிகப்பு
கொடி கம்பீரமாக காற்றில் ஆ
அசைந்த காட்சி, திராவிடம் விழி
தெழுந்து விட்டது—இனி எவரு
அதை அடிமை செய்ய முடியா
என்பதை நிலைகாட்டி வர, அந்த
கொடி தாங்கிக் கொண்டு தூத்து
குடி எக்ஸ்பிரஸ் சோழவந்தானி
ருந்து புறப்பட்ட காட்சி, கரு
கொடி வீசியவண்ணம் வெற்றி
நோக்கி விரைந்தோடிவரும் திரா
டர் இயக்கத்தையே சித்தரித்
காட்டிய நிகழ்ச்சிச் சித்திரம்போ
அமைந்திருந்தது.

5. விருதுநகர்—வீரர் கோட்டம்!

பகல் 2 மணிக்கு வண்டி விரு
நகர் வந்தது. விருது நகர் திரா
வீரர்தம் கோட்டம் அல்லவா!
பாசறைகள் பலவுள்ளே பலமு
சூழ்ச்சித்திறமும் பொருந்தி
தொன்றல்லவா! அங்கிருந்து ஏரா
மான கூட்டம் திராவிடத் துந்து
முழங்கிய வண்ணம் வண்டியி
ஏறிற்று. விருதுநகர்ப் பாச
யிலிருந்து கருப்புக் கொடிக
இரண்டு புறப்பட்டு எஞ்சின்மீ
சென்று நின்றன. நின்று நி
தன. சோழவந்தான் தந்த கொ
யுடன் இவை இரண்டும் கூ
எஞ்சினின் முப்புறமும் நின்
பறந்தன. பறந்தது வண்டி.

6. இப்படி வாருங்கோ அண்ணாச்சி!

மாலை 5½ மணி. தூத்துக்குடி
தது. வண்டி நின்றது. மா

(13-ம் பக்கம் பார்க்க)

ரையாடல் :

தீ மூட்டிய கரம்!

காட்சி 1

இடம் : மதுரை வைகையாற்றங் கரை.

பாத்திரங்கள் : பாட்டாளி ரங்கசாமி, விருத்தாப்பிய அய்யர்.

காலம் : மதுரை மாநாட்டுக்கு முன் நாள் மாலை.

விருத்தாப்பிய அய்யர் : டே ரங்கசாமி, டேய் !

ரங்கசாமி : ஏன் சாமி,

வி. அ : இந்தாடா இங்கே வா. னைக்கு இங்கே அந்த நாஸ்திகன் ராமசாமி நாயக்கன் வர்ரான். வனைத் தெரியும் இல்லேடா ாக்கு. சாமியைத் திட்டுவன். ற்சவத்தைத் திட்டுவன். தேர் ன்னத்துக்கு திருவிழா என்னத் க்கு என்பன். சாமி பெண்டாட்டி க்குதா படையல் பூசை கேக் தா ஆறுவேளை பொங்கல் கேக் தா என்பன். மீனாட்சியம்மன் ங்கிதியைக்கூட திட்டுவன். சாமி ல்லே, பூதம் இல்லை, மதம் இல்லை, ாதி இல்லே, வேதம் இல்லை, சாஸ் ரம் இல்லை, புராணம் இல்லை, து இல்லே, இது இல்லே என்பன். வன் பின்னாடி வர்ரானே ஒரு ானர சேனை கருங்குரங்கு மாதிரி ருப்புச் சொக்கா போட்டிட்டு, வா எல்லாம் அப்படித்தான் சால்வா. மஹாநாடு போடருடா வாள் நாளைக்கு, மஹாநாடு.

ரங் : ஐயையோ! எங்கே சாமி ட்டம் போடரு! இங்கேயா சாமி! ம்ப ஊர்லியா சாமி! நம்ம அம்பா த் திட்டறதுக்கா, அவங்க கண் விஞ்சி பூடும் சாமி, ஆண்டவ த் திட்டறவன் ஐயோன்னு பூடு ான் சாமி. நீங்கவோண்ணு ாருங்க சாமி. மீனாட்சியம்மன் ண்ணைத் திறந்தா இவங்க கதி ஞ்சு பஞ்சா பறந்துபூடும் சாமி.

வி. அ : டே இது திரேதாயுகம் ல்லடா, சாமி, தானே வர. இது லிகாலம்டா கலிகாலம்! கலிகா த்திலே ஈஸ்வரன் தானே வரமாட் ர். நாமதாண்டா ஈஸ்வர கடாட் த்தால் துஷ்டர்களைத் தண்டிக்க ும்! கலிகாலமன்னோ இது. இப் டி வாடா...(காதோடு, இரகசிய க)...நீ...நாளைக்கி....அந்த...பந் ல...கொளுத்திப்பிடணும்... க்கு நிறைய...பணம்..தர்ரேன்.

[ரங்கசாமி முகம் வெளுக்கிறது. அப்படியே அசைவற்று நின்று விடுகிறான். அய்யர் அவனையே உற்றுப்பார்க்கிறார்.]

ஏண்டா முழிக்கிறே! உனக்கும் ராமசாமி நாய்க்கன் வாடை அடிக்குதோ...

ரங் : இல்லிங்க சாமி! இல்லவே இல்லிங்க சாமி! சாமி பூதம் இல்லேன்ற பாவிங்களோடே எனக்கு எப்படி சாமி ஒறவு இருக்கும்?

வி. அ : பின்னே என்னடா யோசிக்கிறே.

ரங் : ஒண்ணுமில்லிங்க சாமி... பந்தலை...கொளுத்...தறது ... நல்ல காரியம்...இல்லே யேன்னு...

வி. அ : ஒன் பிரஹஸ்பதி மூளை யிலே உதிக்குதாக்கும். போடா போ! பேசாம, போது விடிஞ்சதும் சொன்ன வேலையை தைர்யமாச் செஞ்சுடு, போ போ!

[ரங்கசாமி போகிறான். தலை குனிந்த வண்ணம், அய்யர், நெற்றியில் இருக்கும் திருநீறு பளிச் பளிச் என மின்ன, திரும்பிச் செல்கிறார், வெற்றிக்களிப்புடன்! அவர் வாய் மட்டும் "சமர்ப்பயாமி! நாளைக்கு, பந்தல், சமர்ப்பயாமி" என்று முணு முணுக்கிறது]

காட்சி 2

இடம் : மதுரை பொற்றமரைக் குளக்கரை.

பாத்திரங்கள் : ரங்கசாமி, விருத்தாப்பிய அய்யர்.

காலம் ; மதுரை மாநாட்டுக்கு அடுத்த நாள் காலை.

ரங் : சாமி, தண்டம்.

வி. அ : என்னடா தண்டம்.

ரங் : காரியம் முடிஞ்சிது சாமி. பந்தல் தீர்ந்தது. அத்தே பெரிய பந்தல் திகி திகின்னு எரிஞ்சி போச்சி சாமி மூணே நிமிசத்தில். ஆனா.

வி. அ : ஆனா என்னடா ஆனா! ஆனாவும் போனாவும்.

ரங் : இல்லே சாமி, அந்தப் பந்தல்லே எம்மாஞ் ஜனங்க சாமி, அந்த நாய்க்கரு, சாமி இல்லேண்ணு சொன்னா எப்படி சாமி, அம்மாஞ் சனங்களும் கேட்குனு இருக்குது......

வி. அ : ஏண்டா நீயும் சூனமானா ஆவுறியா.

ரங் : இல்ல சாமி, அவரு பேசறதைக் கேக்க சமுத்திரமாட்டம் ஜனங்க வந்துகிதே அவரு எப்படி அம்மாங் கெட்டவரா இருப் பார்னு பார்க்கறேன். பாவம் அம்மாஞ் ஜனங்களும், பந்தல் எரிஞ்சவுடனே என்னா கஷ்டப்பட்டது தெரியுங்களா! பாவம்! கொழந்தையும் குட்டியுமா பொம்மனாட்டிங்க எம்மாம் பேரு வந்துட்டாங்க! எல்லாம் ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டாங்க, சாமி! நான்கூட பந்தல் எரிஞ்ச அப்புறம் ஏண்டா இப்படிச் செய்துட்டோம்னு நெனைச்சிக்கிட்டேன் சாமி.

வி. அ : ஓ ஹோ! சூனமானா ஓதம் அடிக்குதோ? ஏன் இப்படிச் செய்தோம்னு நெனைச்சிக்கிட்டா னும்! நெனைச்சிக்க மாட்டாயா பின்னே! மடையன்க, சாமியைத் திட்டறவன்க, பிராமணத்துவேஷிங்க, அவன்களுக்கு இதானு இன்னும் என்ன கதி வருது பாரேன்.

ரங் : பாவம் சாமி.

வி. அ : பாவமாவது, புண்ணியமாவது. இந்த வேதநிந்தகன்களுக்கு பிராமணத் துவேஷிகளுக்கு பாவம் என்னடா பாவம். நன்னா வேணும் இதுகளுக்கு! மேடையிலே குதிக்கிறபோது பாரு ராஸ்கல்ஸ்! எகிரி எகிரி இல்ல குதிக்குதுகள்! இந்த நாய்க்கன் கும்பல் கஷ்டப்படணும் நான் பாக்கணும்னு ரம்ப நாளா தவங்கிடந்தேனடா நான். இன்னிக்கிதாண்டா மனம் குளுந்தது. பால் பாயசம்டா என் காத்திலே இன்னிக்கி! தெரியுமாடா ரங்கசாமி தெரியுமா நோக்கு?

ரங் : என்னமோ சாமி அந்த ஜனங்க அடிபட்டதும் சொக்கா கிழிஞ்சதும் ஓடி ஒளிஞ்சதும் எனக்குப் பிடிக்கல்லே சாமி. [போகிறான்]

வி. அ : (தனியே) :—இந்த சூத்திரப் பயல்கூட இல்ல ஐயோ பாவம்னு சொல்றான். இவன் கிட்டயும் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும், இல்லேன்னா ஆபத்துதான். இந்தக் காலத்தில் சூத்தி

ரப் பசங்க யாரையும் நம்பவே படாது. "குளித்த குதிரையையும் படித்த சூத்திரனையும் நம்பாதே"ன்னு மனுதர்மம் சொன்னது சும்மாவா? படித்த சூத்திரனை நம்பாதே என்றது அந்தக் காலத்துக்குச் சரி. இந்தக் காலத்திலே படிக்காத சூத்திரனையுந்தான் நம்பப்படாது. பாரேன், நேற்று பந்தலைக் கொளுத்தனுன் இந்தப் பய, இன்னிக்கி ஐயோ பாவம்ங்கருன். இவனும் . மாநாட்டிலே இராமசாமி நாய்க்கன் பேசற போது கொஞ்சம் நஞ்சம் கேட்டிருப்பன். அதான் இப்படிப் பேசருன். ஆகட்டும் சொல்றேன்.

[பூணூலை உருவிக்கொண்டே. போகிறார். முகம் கடுகடுத்த தோற்றம் தருகிறது. அய்யர் மிகவும் ஆவேசத்துடன் காணப்படுகிறார்.]

காட்சி 3

இடம்: மதுரையில் ஒரு தெரு.

பாத்திரங்கள்: ரங்கசாமி, விருத்தாப்பிய அய்யர்.

காலம்: தூத்துக்குடி மாநாட்டிற்கு ஒரு வாரத்திற்கு முன்.

[அய்யர் வேகமாக தெற்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறார். ரங்கசாமி வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கிறன். இருவரும் சந்திக்கின்றனர்.]

வி. அ: டே ரங்கசாமி எங்கடா இவ்வளவு அவசரமாகப் போறே.

ரங்க: யாரது! விருத்தாப்பிய அய்யரா? ஓய்! யாரை அடா புடா என்று கூப்பிடுகிறீர்! ஜாக்கிரதையாய் பேசும்! ஏதோ போனப் போறீர் என்று பார்த்தால் இருக்க இருக்க தலைக்குமேல் போகிறீரே என்ன சங்கதி? நான் என்ன உமக்கு மாட்டுக்காரப் பையனா. நான் டே ரங்கசாமியா உமக்கு. ஏன்யா நான் கேக்கறேன், என்னயா முழிக்கிறே?

வி. அ: தம்பி, தம்பி கொஞ்சம் பொறு. கொஞ்சம் பொறு. முன்னே பின்னே பார்த்துப் பேசு.

ரங்க: தம்பியும் அண்ணனும். என்னயா பொறுக்கிறது. பொறுத்துப் பொறுத்துத்தான் நாங்க இந்தக் கதிக்கு வந்தோமே, இன்னும் என்னத்தை பொறுக்கிறது. முன்னே பின்னே பார்த்துப் பேசு இக்கிறியே அது என்னயா அது? முன்னே ஓம் பேச்சை கேட்டுக்கிட்டு முட்டாளா இனத் துரோகியா எங்க மக்களுக்குக் கெடுதி செய்றவனா இருந்தனே, அது மாதிரியே இருடா இனியும் இங்கிறியா. அதுதானே இனி நடக்காது. அண்ணைக்குத்தான் ஏதோ புத்தி கெட்டுப்போய் ஓம் பேச்சை கேட்டுக்கிட்டு எங்க மாநாட்டுக்குத் தீவைச்சேன். மா பாதகம் செய்த மாபாவி ஆனேன். அதை நெனைச்சி நெனைச்சித்தானே இப்பவும் கண்ணீர் விட்டுக் கதறி அழறேன். ஆனா, ஓய் அய்யர், நான் சொல்றேன், இனி அது நடக்காது. விபீஷணனுக்கும் உணர்ச்சி வர்ர காலம் இது. ஆமாம், சுக்ரீவர்களுக்கும் உணர்ச்சி வர்ர காலம் இது.

வி. அ: என்னுங்க நாய்க்கர்வாள், என்னென்னமோ பேசுறீங்க. என்னமோ போங்க. நேத்துவரைக்கும் வெறும் ரங்கசாமியா இருந்தீங்க. இண்ணைக்கு ரங்கசாமி நாய்க்கர்வாள் ஆயிட்டீங்க. இந்த பாழாப்போன சாதி வித்தியாசம் உங்களையும் புடிச்சிக்கிச்சி .....அது இருக்கட்டும்...... அதனால் என்ன......நாம்ப எப்பவும் போல சிநேகிதாளா இருக்கலாமே! என்ன சொல்றீர்.

ரங்க: சொல்றதென்ன! போறதென்ன? நயமாப் பேசி ஏமாத்திடலாம்னு பார்க்கிறீரோ? அதெல்லாம் இந்த ரங்கசாமியிடம் செல்லாது. பழைய ஏமாந்த ரங்கசாமியிடம் செல்லும். ஆனா, அந்த ரங்கசாமியில்லே இப்ப இருக்கிறது. இது புது ரங்கசாமி. தன்மான ரங்கசாமி......நான் என்னமோ, இண்ணிக்கி, நாய்க்கன் ஆயிட்டேன் சாதி வேறுபாடு காட்டறேன் இன்னியே, நீ மட்டும் பிறந்தப்போ இருந்து அய்யராகவே இருக்கிறியே, இருக்கலாமா. அது சாதி வித்தியாசம் இல்லையா, ஓய்!

வி. அ: என்னமோ் என்கால பலன்! பகவத் புத்திரரான நாய்க்கர்வாள் இப்படிப் பேசவும் நான் அதைக் கேக்கவும் ஆச்சு......... (போகிறார்)

ரங்க: (தனியே):— பணிவா அடக்கமா இருந்தவரை 'டே ரங்கசாமி'ங்கரான். யாரைப் பார்த்து அப்படிச் சொன்னே, ஜாக்கிரதைன்னு மிரட்டினவுடனே, 'என்னுங்க நாய்க்கர்வாள்'ங்கிறான். அப்பப்பா! கெஞ்சினா மிஞ்சிறது மிஞ்சினா கெஞ்சறது! இதுங்க சாதி புத்தியே இப்படித்தான்! இ வளவு திட்டினனே கொஞ்சமா கோபம் வந்ததா அந்த ஆளுக்கு மறுபடியும் நயமாப் பேசி என் மடக்கத்தானே வலை விரிக்கிறான் ஆரியன் கூத்தாடினாலும் காரிய திலே கண்ணா இருப்பான்னு பெ யவங்க தெரியாமையா சொன் னுங்க.......இப்பத்தானே தெரியு அந்த தாடிக்காரர் செல்றது ஒ வொண்ணும் உண்மைதான் இண்றது. (போகிறான்)

காட்சி 4

இடம்: தூத்துக்குடியில் ஓ பங்களா.

பாத்திரங்கள்: தமிழர் தலைவ ரங்கசாமி.

காலம்: தூத்துக்குடி மாநா நடந்த இரவு.

ரங்க: ஐயா மன்னிக்கணு என்னை மன்னிக்கணும் நான் ஒ பெரிய பாவி. மாபாதகம் செ தவன். ஐயோ அவர்கள் மன்னி கணும்.

தமிழர் தலைவர்: நீங்க யா தெரியல்லியே? என்ன விசேஷம் என்னையா பார்க்க வந்தீர்கள் என்ன விசேஷம்?

ரங்க: ஒண்ணுமில்லை...நா தான் ..மதுரைப் பந்தலைக்கொளு தின பாதகன். நான்தான் நம் தா மார்களைத் தவிக்கவிட்ட காதகன் நான்தான் நம திராவிடத் தோழ கள் அடிபடவும் உதைபடவும் து பப்படவும் காரணமாய் இருந் கொடியவன். நான்தான்...

[கண்ணீர் விட்டுக் கதறி அ கிறார். அது கண்டு, தமிழ தலைவர், தன்னுடைய அந்த அ கிய வெண்தாடியை அசைத் வண்ணம், ஒளி வீசும் கண் ளால் நாற்புறமும் பாய்ந் பாய்ந்து நோக்கிய வண்ண அவருக்கு ஆறுதல் கூறுகிறார்]

தமிழர் தலைவர்: அழாதீர்கள் ஏதோ நடந்தது நடந்து விட்ட அதனால் என்ன? இப்பொழு வது உணர்ந்து திருந்திவிருக்கிறீ களே, இதுவே போதும்.

ரங்க: (கண்களில் நீர் ததும்ப ததும்ப) ஐயா, நீங்க மன்னிக்கணு என்னை நீங்கஏற்றுக்கொள்ளணு நான் அப்ப ஏமாந்துபோய் இ இனத்துரோக ஈனச் செயல்செய் விட்டேன். நீங்க மன்னிக்கணு இனி நான் உங்க சிஷ்யன்.

(12-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைந்து எல்லோரும் ஒரே நிலையினராக மாறியாக வேண்டும்.

எவ்வளவுதான் சூத்திரனுக்கு அதிகச் சம்பளம் கொடுத்தாலும், அதிகக் கல்விகொடுத்தாலும் அதிக பட்டம் பதவிகள் கொடுத்தாலும் அவன சூத்திரனாக இருக்கும்வரை அவனுடையசமுதாய இழிவு போகாது. அவனுடைய சமுதாய இழிவுபோக வேண்டுமானால அவன் சூத்திரன் என்பது தொலைந்து மனிதன் என்று ஆக வேண்டும். அவன் மனிதன் என்று ஆகவேண்டுமானால் வேறு ஒருவன் பார்ப்பனன் என்று இருப்பது மாறி அவனும் மனிதன் என்றாக வேண்டும். அல்லாதவரையில் எவ்வளவுதான் படித்தாலும், பட்டம் பதவி பெற்றாலும், உயர்ந்த நிலையை அடைந்தாலும் சூத்திரன் என்பவனின் சூத்திரத் தன்மை அழியாது.

அதேபோலத்தான் ஒரு தொழிலாளிக்கு எவ்வளவுதான் கூலி உயர்ந்தாலும், எவ்வளவுதான் சுகபோகங்கள் ஏற்பட்டாலும், எவ்வளவுதான் வேலை நேரம் குறைந்தாலும், அவன் தொழிலாளி என்று இருக்கும் வரை அவனுடைய இழிவு நீங்காது. அவன் இழிவு நீங்குவதற்கு ஒரே ஒரு வழி அவன் தொழிலாளி என்பதிலிருந்து மாறுவது தான். அப்படி அவன் மாறவேண்டுமானால் முதலாளியும் முதலாளி என்பதிலிருந்து மாறியாக வேண்டும். தொழிலாளர்களின் நிலைஉயர்வதற்கு உண்மையான பரிகாரம் இதுதான்.

இதோ தென் இந்திய ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். ஏன்? அவர்களுக்குத் தக்கவசதி செய்து தரப்படவில்லை. இந்த ரயில்வேயின் சென்ற ஆண்டு வருமானம் 35 கோடி ரூபாய். செலவு 27½ கோடி. மிச்சம் 7½ கோடி. இவ்வளவு பெருந் தொகை மிச்சமாய இருந்துங்கூட சர்க்கார், தொழிலாளர்கட்குத் தகுந்த வசதிகள் செய்து தரமுடியவில்லை. இது எதனால் இப்படி நேர்ந்தது தெரியுமா? இந்த ரெயில்வே பெயரளவுக்கு சர்க்காருடையது சர்க்காரால் நடத்தப் படுகிறது என்று சொன்னாலும் தனிப்பட்ட முதலாளிகளின் பங்கு இந்த ரயில்வேயின் மூலதனத்தில் குறிப்பிடத்தக்க அளவு இருக்கிறது. லாபத்தில் பெரும் பகுதி அந்த மூலதனத்திலிருந்து பெற்ற வருவாய்க்காக அவர்களுக்குத் தந்தாக வேண்டி இருக்கிறது. ஆகையால் தான் நான்சொல்கிறேன் இப்படிப்பட்ட தொழில்களில் கொஞ்சம் கூட தனிப்பட்ட முதலாளிகட்குப் பங்கு இருக்கக் கூடாது. முழுதும் சர்க்காருடையதாகவே இருக்க வேண்டும். அப்படி இருந்தால் லாபத்தை மூன்று பங்காகப் போட்டு, ஒரு பங்கை அந்தத் தொழிலின் வளர்ச்சிக்கான சேமிப்பு நிதியாக வைத்து விட்டு, மற்ற இரு பங்கை தொழிலாளரும் சர்க்காரும ஆளுக்கொரு பங்காக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் இப்போதோ ரயில்வே சர்க்காருடையதாக இருக்கிறது என்று சொல்லப்பட்டும் கூட, லாபத்தில் ஒரு பைசாவும் தொழிலாளிகட்குச் சேரவில்லை. இது மிக மிக அக்கிரமமான செயல் என்றே கூறவேண்டும்.

இப்பொழுதுள்ள சர்க்கார் முதலாளிகட்குக் காட்டுகிற சலுகை மிக மிக அதிகம். தொழிலாளிகட்குக் காட்டும் சலுகை கொஞ்சமோ கொஞ்சம், இன்றைய சர்க்காருடைய கொள்கையால், திட்டத்தால், நடைமுறையால் ஏழை மேலும் மேலும் ஏழையாகிறன்; பணக்காரன் மேலும் மேலும் பணக்காரனாகிக் கொண்டே போகிறன். இந்த அநீதியும் மாறியாக வேண்டும்.

தொழிலாளர் கஷ்டங்களுக்கு நான் மிகவும் வருந்துபவன். திராவிடர் கழகமும் அவர்களுடைய குறைபாடுகளைக் களைவதற்காக எத்தகைய பரிகாரமும் செய்யத் தயாராய் இருக்கிறது. தொழிலாளருக்கு உண்மையில் வழிகாட்டுபவர்கள் நாம் தான். அவர்களுக்கே கூடத் தெரியாத பல அநுகூலங்களை அவர்களுக்குச் சுட்டிக் காட்டியவர்களும் நாம் தான். கூலி உயர்வு மட்டும் போதாது, போனஸ் மட்டும் போதாது, லாபத்திலேயே தொழிலாளருக்குப் பங்கு இருக்க வேண்டும் என்று நாம் தான் இந்நாட்டில் முதலில் சொன்னோம். 10 ஆண்டுகளுக்கு முன்னேயே சொன்னோம். இப்போது பல தொழில் நிலையங்களில் இந்த முறை அமுலுக்கு வரப்போகிறது. திருவிதாங்கூர் சர்க்கார்கூட அடுத்த ஆண்டுமுதல் சர்க்கார் நடத்தும் ஒரு முக்கியமான, தொழிலில் இந்த முறையைக் கையாளப் போவதாகத் தெரிவித்துள்ளனர். விரைவில் இந்த முறையே நாடு முற்றிலும் அமுலுக்கு வரப்போகிறது.

பத்து ஆண்டுகளாக, லாபத்திலேயே பங்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லி வந்தோம். அது ஓரளவு பலன் கொடுக்கத் தொடங்கி இருக்கிறது. இப்போது நாம் லாபத்தில் பங்குகொடுப்பது மட்டும் போதாது, தொழிற்சாலை மூலதனத்திலேயே முதலிலேயே (Capital) தொழிலாளருக்குப் பங்கு தரப்படவேண்டும் என்று இந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். பணம் மட்டுமே ஒரு தொழிற்சாலைக்கு மூலதனம் (Capital) ஆகிவிடாது. தொழிலாளியின் தொழில் திறமையும் மூலதனம்தான். பணக்காரன் பணத்தை மூலதனமாகப் போடுகிறன். தொழிலாளி தொழிலை மூலதனமாகப்போடுகிறன். பணக்காரன், பணக்கூட்டு. தொழிலாளி கஷ்டக்

(தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

வெண்ணிலாவும் வானும்போலே!

ஆம்! வெண்ணிலாவும் வானும் போல, வீரனும் கூர் வாளும் போல, மகர யாழும் இசையும் போல, மலரும் அதன் மணமும் போல, வண்ணத் தமிழும் சுவையும் போல திராவிடர் கழகமும் திராவிடர் உள்ளமும் இரண்டறக் கலந்துவிட்டன; ஒன்றிலே ஒன்று இணைந்துவிட்டன; பிரிக்கமுடியாதபடி சேர்ந்துவிட்டன.

வானத்திலே வெண்ணிலா ஊர்ந்து செல்லும்போது வானம் வேறு வெண்ணிலா வேறு என்பது போலத்தான் தோன்றுகிறது. ஆனால் வெண்ணிலாவையும் வானத்தையும் யார் பிரித்தெடுக்கமுடியும்? மலரையும் மணத்தையும் யார் தனித்துக் காட்டமுடியும்? தமிழையும் சுவையையும் தனித்தனியே வகுத்துக்காட்ட வல்லார் யார்? இவைபோலத்தான் திராவிடர் கழகத்தையும் திராவிடர் உள்ளத்தையும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரித்துக் காட்டவோ தனித்து எடுக்கவோ வகுத்து அமைக்கவோ முடியாது.

சிந்து பாடிக்கொண்டு, சிரித்து விளையாடிக் கொண்டு, மலையிலிருந்து உருண்டோடிவரும் சிற்றாறு இறுதியில் கடலுடன் கலந்துவிடுகின்றது. சுவை கமழக் கமழப் பாடப்படும் தமிழிசை முடிவில் வான வெளியுடன் இணைந்துவிடுகிறது. காதலனும் காதலியும் சந்திக்குங்கால் காதலன் உள்ளம் காதலியின் நெஞ்சிலே நின்று நர்த்தனமாட ஓடோடிப் போய்விடுகிறது. திராவிடர் கழகமும் திராவிடர் உள்ளத்திலே புகுந்து, அங்கு தன் அன்பு முத்திரையைப் பொறித்துவிட்டு, பிறகு அந்த உள்ளத்திலேயொரு உள்ளமாக, வீணையில் நாதம் போல, வெற்றியில் இன்பம் போல, அதுவே தானாகி, தானே அதுவாகி, அதுவும் தானும் ஒன்றாகிவிட்டது.

தூத்துக்குடி மாநாடு இந்தக் காட்சியின் மாட்சிக்கோர் சாட்சி! மே 8, 9 தேதிகளில் அங்கே கடலெனத் திரண்டிருந்த திராவிடர் பட்டாளமும், அடைந்தால் திராவிடநாடு இல்லையேல் இடுகாடு என்று அவர்கள் ஒரு குரலில் எழுப்பிய பெரு முழக்கும், அந்த மாநாட்டில் அவர்கள் காட்டிய ஊக்கமும் உற்சாகமும் உணர்ச்சியும் எழுச்சியும், வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்—விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்—சூழ்ச்சிதனை வஞ்சகத்தை பொறாமை தன்னை தொலைகயாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச் செயல்கள் மிகவும் வேண்டும் என்றெல்லாம் அவர்கள்

அறுதியிட்டுக் கூறிய உறு[...]
மொழிகளும், "எங்கள் த[...]
வமே! பெரியார் அவர்களை[...]
புரட்சியின் சின்னமே! புத்து[...]
கச் சிற்பியே! புது வாழ்வை
எமக்களித்த பெருந்தகையே
ஒரு வார்த்தை! ஒரு வார்த்தை
ஓரே ஒரு வார்த்தை கூறுங்கள்
களம் செல்ல நாங்கள் தயா[...]
தயார்" என்று தம் தலைவ[...]
பிரானை நோக்கி அவர்கள் குழை[...]
யிரந்த காட்சியும், "இதோ எ[...]
கள் தலைவர்! கட்டு முறை சிறை[...]
சென்று வாகை சூடிய வீரர்[...]
தியாக உணர்விலே பிறந்து
தியாக உணர்விலே வளர்ந்து
தியாக உணர்விலே வாழும்
பெருந்தகை! பட்டிக் கும்பா[...]
என வாழும் நிலை பெற்றிரு[...]
தும் அந்நிலையைத் துச்சமென
வெறுத்துத் தள்ளி ஏழை எளி[...]
யாருடன் இணைந்து நின்று
பணியாற்றும் ஈரோட்டு அண்[...]
ணல்" என்று மக்கள், தம் த[...]
வரைப் பார்த்து பூரிப்புடன்
புகன்ற மொழிகளும் திராவிட[...]
கழகத்தின்மீது நாட்டு மக்கள்
உள்ளத்திலேஉள்ள பற்றை—பா[...]
சத்தை—ஆழ்ந்த நம்பிக்கையை
—நல்லெண்ணத்தை—அன்பை
—ஆர்வத்தை—ஆநந்தத்தை அழ[...]
குறச் சித்தரிக்கும் அரியதன்மை
வாய்ந்தன அல்லவோ?

தூத்துக்குடியில், மக்கள்
திராவிடர் கழகம் என்ற சொ[...]
கேட்டதும், துள்ளிக் குதித்[...]
ஆநந்தத் தாண்டவம் ஆடின[...]
கள். துன்பம் நேர்கையில்
யாழ் எடுத்து எமக்கு இன்ப[...]
சேர்க்கும் இசைவாணன் அ[...]
என்று கூவினார்கள். நாட்டின்
மீது மாற்றார் வாள் வீசப்படு[...]
போது வாளை வாளால் வாங்[...]
மறுவாள் எறிந்து பகை அழி[...]
கும் மாவீரன் அது என்[...]
களிப்புடன் தெம்மாங்கு பா[...]
னார்கள். "திராவிடர் கழக[...]
எங்கள் கண்ணின்மணி! உ[...]
நக்கு உயிர்! எங்கள் உ[...]

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமசாமி ரெட்டியார் இவரே பிராமணத் துவேஷி ஆயிட்டாரே! இவரே இப்படின்னா அப்புறம் வேறேயாரை ஓய் நம்பறது. நாம தான் சர்வ ஜாக்கிரதையா நடந்துக்கணும்...ஏன் ஓய் இந்த ரங்கசாமி சங்கதிக்கா இப்படி இடிஞ்சி கிடக்கிறீர்......எழுந்திரும் எழுந்திரும்.

அய்யர்: ஹூம், கேக்கு ஒண்ணும் புரியல்லே. எல்லாம் ஒரே குழப்பமா இருக்கு.

[என்று சொல்லிக்கொண்டே விபூதி மடலிலிருந்து விபூதி எடுத்துப் பூசிக்கொள்கிறார்!]

[**முக்கிய அறிவிப்பு**: உரையாடல் முற்றிலும் கற்பனையே. உரையாடலில் வரும் பாத்திரங்களும் கற்பனையே. அவர்களின் பெயர்களும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பன அல்ல. ஆனால் மதுரை மாநாட்டுப் பந்தலைக் கொளுத்திய திராவிடத் தோழர் தூத்துக்குடி மாநாட்டில் பெரியார் அவர்களிடம் வந்து தான் செய்த செயலுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொண்டது மட்டும் உண்மை.]

..டுத்தேனும் உடைமைகளைப்
..கொடுத்தேனும் நாங்கள்
..த்துத் தீரவேண்டிய உயர்
..ருள்! எங்களை உன்னத
..க்கு அழைத்துச் செல்லும்
..த்தமர்தம் ஆயுதம்! புரட்சி
..ன் வளர்ச்சக்கான புதுக்
..ருவி!" என்று பற்பல வார்த்
..தகளைச் சொல்லிச் சொல்லி,
..று பல பெற்றவர்போல்
..கிழ்ச்சிக் கடலில் மூழ்கித்
..ளைத்திடலானார்கள். திராவிடர்
..ழகம் இருக்கும்போது எமக்
..என்ன குறை—ஏது எமக்கு
..ச்சம் என்று பேசினார்கள்.
..றுமையோடு, பூரிப்போடு,
..மை யார் என்ன செய்யமுடி
..ம் என்ற இறுமாப்போடு, எலி
..ர் புசிக்க எலாம் கொடுத்தே
..க ஏறுகள் ஏங்கிடுமோ என்ற
..மூர்ச்சிப் பாசுரத்தோடு, புலிகள்
..த்துப் புசிப்பளித்தே ஒரு புதரி
..ல் தூங்கிடுமோ என்ற பாட்டு
..மாழியோடு தூத்துக்குடி
..ருக்களில் அவர்கள் உலவி
..கள். அவர்கள் முகத்திலே
..ப்பு! தோளிலே வீரம்! கரத்
..லே உறுதி! கண்களில் புத்
..ளி! நெஞ்சிலே புரட்சி!
..லிலே கருஞ்சட்டை! அவர்
..நடையிலேயே ஒரு முடுக்கு.
..வர்கள் பேச்சிலேயே ஒரு
..ம். அவர்கள் பார்வையி
..யே ஒரு கம்பீரம்! மான
..ன்றே நல்வாழ்வெனக்
..ண்டு வாழ்ந்த எம் தமிழ்
..த்தர் பூனைகள் அல்லர் அவர்
..வர்தாம் புலிநிகர் தமிழ்மாக்
..என்று வீர மொழிகளை
..ர்த்த வண்ணம் செல்கின்ற
..அன்னார். திராவிடர் கழ
..என்றதும் அவர்கள் நடை
..புது முறுக்கும் நினைப்
..புது எழுச்சியும் செய
..மின்சார ஓட்டமும் ஏற்
..காரணம் என்ன? திரா
..கழகம் என்ற சொல்,
..வியின் மந்திரக் கோல்
.., அவர்கள் உள்ளத்தை
..ம்பம்போல் ஆட்டிவைக்

கின்றதே, அது எதனால்? என்ன காரணம் அவர்கள் மகிழ்ச்சிக்கு? என்னதான் காரணம்?

காரணம் இருக்கிறது. அவர்கள் மகிழ்ச்சிக்கும் மனக்கிளர்ச்சிக்கும் காரணம் இருக்கிறது. திராவிடர் கழகம் என்ற துந்துபி முழக்கத்தைக் கேட்டதும் அவர்கள் ஆநந்தப் பள்ளு பாடுவதற்குக் காரணம் இருக்கிறது.

உழவன், தன் கழனிக்குச் செல்கிறான், களையெடுக்கிறான், காம்பு திருத்துகிறான், எரு தூவுகிறான், விதை போடுகிறான், இனி மழை வேண்டும் அவனுக்கு. அண்ணாந்து பார்க்கிறான மேல் வானத்தை. மழையே நீ வாராயோ என்று வேண்டி "தவங்"கிடக்கிறான். அதே நேரத்தில் "தகரப் பந்தல் தண தண என்னத் தாழுங் குடிசை சள சள வென்ன" மழை பொழியத் தொடங்கினால், அவன் உள்ளம் எப்படி இருக்கும்?

வாழ்நாள் முழுவதும் வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வாழும் வழி அறியாது, வாழ்க்கையின் இன்பமும் அறியாது, செத்த வாழ்வு வாழ்ந்து சீரழிந்து கிடக்கும் ஏழை ஒருவன் முன் திடீரென்று பெருஞ் செல்வத்திரள் ஒன்று கொட்டப்பட்டு, "தம்பி! நீ உன் விருப்பம்போல் செலவு செய்திடு" என்று கூறப்பட்டால் அந்த ஏழை உள்ளம் எவ்வளவு களிப்புறும்?

மலரும், பாடும் வண்டும், தளிரும், மலையும், கடலும், வாவியும், ஓடையும், விண்ணின் விரிவும், மண்ணின் வனப்பும், காலை அம் பரிதியும், மாலை மதியமும், நீலச் சுடர்மணி வானமும் அங்கு நிறையக் காணும் விண்மீன்களும் கண்ணைக்கவரும் ஒவியங்களே எனினும் கண் இரண்டும் இன்றிப் பிறந்த காரணத்தால் அந்தக் "கை புனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பு"களைக் காண இயலாது கருத்தழியும் பிறவிக் குருடன் விஞ்ஞானத்தின் துணையினால் கண் பார்வை முழுவதும் பெறுவானாயின் அவன் உள்ளத்தின் துள்ளலுக்கும் மகிழ்ச்சிக்கும் ஓர் எல்லை உண்டோ?

தன் காதலியைப் பிரிந்து பல ஆண்டுகளாக நைந்து வாடும் காதலன் திடீரென ஓர் நாள் தன் அருமைக் காதலியை எதிர்பாராத இடத்தில் சற்றேனும் எதிர்பாராத நேரத்தில் காணநேர்ந்தால் அவன் நெஞ்சில் உறும் இன்பத்திற்கு ஈடுகாட்ட வல்லார் யார்?

மழைமுகம் கண்டால், தான் வளர்க்கும் பயிர் முகம் நிமிரும். ஆகவே மழையின் வரவு கண்ட உழவன் களிக்கிறான்.

செல்வம் தன்பால் சேர்ந்தால் தன் வறண்ட வாழ்க்கையில் இன்பம் சேரும், பசுமை தோன்றும், புதுமை பிறக்கும், தென்றல் வீசும் என்பதை நன்கறிவான் ஏழை. அந்த அறிவுதான் செல்வம் கண்டதும் பூரிப்படையச் செய்கிறது அவனை.

கண் பெற்றால் புது வாழ்வு பெற்றதாகும் என்பது குருடனுக்குச் சொல்லித் தெரியவேண்டிய சேதி அல்ல. ஆகவே கண் இரண்டும் பெற்றபோது ஆனந்தம் அவனைத் தழுவுவது ஆச்சரியத்திற்குரியதல்ல.

காதலியைக் கண்ட காதலன், மகிழ்கிறான். காரணம், இதுவரை கவிழ்ந்த தாமரை எனக் கிடந்த தன் வாழ்வு, இனி சிரித்த முல்லை என மலரும் என்பதை அவன் அறிவான்.

திராவிடன், திராவிடர் கழகத்தைக் கண்டால், மழைமுகம் கண்ட உழவன்போல் ஆகிறான்; பொருள் புதிதுகண்ட வறியவன் போல் மாறுகிறான்; கண் இரண்டும் பெற்ற குருடன்போல் களி முறுகிறான்; காதலியைக்கண்ட காதலன் என நெஞ்சு நிமிர்கிறான். ஆகவேதான் அவன் திராவிடர் கழகம் எனக் கேட்டால், கண்டால், என்னிலும் கூட, மகிழ்கிறன்.

திராவிடம் ஓர் அணைந்தவிளக்கு. அதை மீண்டும் ஏற்றுகிறது, திராவிடர் கழகம். திராவிடனின் களிப்புக்குக் காரணம் அதுதான்.

திராவிடம் என்ற மாணிக்கத்தைச் சுற்றி புற்றும் புதரும் மூடிக்கிடக்கின்றன. அவற்றை வெட்டிச் சாய்த்துவிட்டு உள்ளிருக்கும் மாமணியை—முழுதும் பழுதற்ற முத்தமிழை வெளிக்கொணரப் பாடுபடுகிறது திராவிடர் கழகம்.

'நம் நாடு' என்ற முத்துச் சிப்பியைச் சுற்றி, சுறுவும சுழல் காற்றும் ஆழ்கடலும் ஆபத்துகள் பல்லாயிரமும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. இந்த ஆபத்துகள் அத்தனையையும் தாண்டிக்கொண்டு, ஆழ்கடலுக்குள் நுழைந்து முத்தெடுக்கும் பாட்டாளி, திராவிடர் கழகம்.

சுரங்கத்துள்ளே கிடக்கும் தங்கம் திராவிடம். அந்தத் தங்கத்தைத் தோண்டியெடுத்து தட்டிப் பிரித்து தூசி போக்கி மாசுகள் களைந்து அழகிய பொன் அணியாக அதை மாற்றி அமைக்கும் நிலைக்குக் கொணர்ந்திடும் சுரங்கத் தொழிலாளி, திராவிடர் கழகம்.

அடுக்கடுக்காக எழும்பிவரும் எத்தகைய ஆபத்துகளுக்கும் அஞ்சாது, எவ்வெவர் தீமைக்கும் தலைகுனியாது, ஆளவந்தார்களின் ஆர்ப்பாட்டம் கண்டு சாயாது, பழமைப் பித்தர்களின் கண்ணீர் கண்டுங் கலங்காது, வைதீகர்களின் கோட்சேச் செயல் கண்டும் மனம் குலையாது, நம்மை ஈன்று புறந்தந்த பொன்னாட்டின் வரலாற்றில் இன்பப் புது ஏட்டைச் சேர்ப்பதற்காக ஓய்வு ஒழிவு இன்றிப் போராடிவரும் ஓர் மறவன், மாவீரன், செந்தமிழன், செங்குட்டுவன் திராவிடர் கழகம்.'

ஆம்! ஆகவேதான் திராவிடன் சிந்தையில் தேன் பாய்கிறது [illegible]

திராவிடர் கழகம் திராவிடர் உள்ளந்தோறும் அரியாசனம் ஏறிவிட்டது என்பதை தூத்துக்குடி நன்கெடுத்துக் காட்டிவிட்டது. அந்தக் கழகம் வளர்ந்திருக்கும் அளவு, அதன் பலம், அதற்குள்ள செல்வாக்கு, செல்லரித்துப்போன இன்றைய சமுதாய அமைப்பு முறையைத் தணலுக்கு விருந்தாக்கிவிட்டு புதியதோர் சமுதாயத்தை உருவாக்குவதில் அதற்குள்ள ஆர்வம், பழக்கம், பயிற்சி, திறமை, தெளிவு ஆகியவற்றை தூத்துக்குடி படம் பிடித்துக் காட்டிவிட்டது.

அவசர அவசரமாக பலமான மத்திய சர்க்கார் அமைக்கப்படும் இந்த நேரத்தில்தான், திராவிடர்களின் ஒப்புதல் இன்றியும் அவர்களின் இலட்சிய கீதத்தை அலட்சியப்படுத்தும் விதத்திலும் புதிய அரசியல் திட்டம் டில்லி சர்க்காரால் தீட்டப்படுகிற இந்த நேரத்தில்தான், கருஞ்சட்டைப் படை மீது தடையை வீசி, சர்க்கார், தமிழர் உள்ளத்தினின்று வெறுப்பைப் பரிசாகப் பெற்றுள்ள இந்த நேரத்தில்தான், ஆச்சாரியாரின் ஆட்சிக்காலத்தில் மரணப் படுகுழிக்குச் சென்ற கட்டாய இந்தி மீண்டும் தலைநிமிர்ந்து பார்த்து மறுபடியும் தாளமுத்து நடராசர்களைக் கூவி அழைக்கிற இந்த நேரத்தில்தான், ஜனநாயகம் மறைந்து பண நாயகமும் பாசிசமும் இந்தியாவில் அரியணை ஏறி நின்று அடாணு வாசிக்கும் இந்த நேரத்தில்தான், நாட்டிலே காங்கிரஸ் ஒன்று தவிர வேறு கட்சிகளே இருத்தல் கூடாது என்று முடிவு கட்டிக்கொண்டு பிற கட்சிகளுக்கு சர்க்கார் கல்லறை தேடிடும் "மெயின் காம்ப்" படலம் நடந்திடும் இந்த நேரத்தில்தான், உரிமைக்கு ஆபத்தும் சமதர்ம இலட்சியத்திற்குச் சவக்குழியும்

இந்த நேரத்தில்தான், இல்லா
கருஞ்சட்டைப் படையை ம
டுமா இருக்கிற இராவண கா
யத்தையும் கூடத் தடை செ
வோம் என்று ஆட்சிக் குழுவின
உறுமி நிற்கிற இந்நேரத்தி
தான், சீர்திருத்தம் என்று பே
னால்—சமத்துவம் என்று கூ
னால்—எல்லோரும் ஓர் குல
எல்லோரும் ஓர் நிறை எல்லே
ரும் இந்நாட்டு மன்னர் என்
கவி பாடினால் அப்படிப்பாடுப
காந்தியாராய் இருந்தாலும்
அவரைச் சுட்டு வீழ்த்து என்
கூறும் சுடு நெஞ்சர்கள் மிகுந்
விட்ட இந் நேரத்தில்தான், பு
ஆயுதம் ஏந்திய கரங்கள் வா
யுதமும் ஏந்தும் என்று கிழி
பழம் பஞ்சாங்கங்கள் வீண் ச
சலப்புக் காட்டுகிற இந்த நே
தில்தான் "தூத்துக்குடி" ந
திருக்கிறது; திராவிடர் கழ
தின் பலத்தையும் செல்வாக்
யும் எடுத்துக்காட்டியிருக்கிற

யாருக்கு?

எல்லோருக்குந்தான்.

காணக் கண் படைத்த
யாவருக்குந்தான்.

சிந்திக்கும் திறம் உடைய
ஒவ்வொருவருக்குந்தான்.

கண்மூடிக் கபோதிகள் த
கண்களை அகலத் திற
கொண்டே குழியில் வி
குருட்டறிவாளர்களைத் த
மற்ற எல்லோருக்குந்தான்.

இன்றைய (அரசியல்) வ
வையே சதம் என்றெண்
இறுமாந்து கிடக்கும் சா
நாற்காலி சுகபோகிகளைத் த
ஏனையோர் அனைவருக்குந்தா

காணக் கூடியவர்கள் கா
டும்.

சிந்திக்குந் திறம் உடைய
கள் சிந்திக்கட்டும்.

மற்றவர்கள்—?

மற்றவர்களைப் பற்றி
கென்ன கவலை?

)ன்னும் கொஞ்சம் அண்ணாச்சி!

"சாப்பிடுங்கோ அண்ணாச்சி,
ப்பிடுங்கோ! இன்னும் கொஞ்
சாப்பிடுங்கோ! நிறைய சாப்
டுங்கோ! சாதம் வேணுமா,
ம்பார் வேணுமா, ரசம்
ணுமா, பால்பாயசம் வேணு
, மோர் வேணுமா, கறிகள்
ண்டுமா, கூட்டு பொரியல்
றவல் ஊறுகாய் என்ன
ணும் கேட்டு சாப்பிடுங்கோ!
தென்ன அண்ணாச்சி இம்புட்
ண்டு சாப்பிடறீங்க! நிறைய
ப்பிடுங்க அண்ணாச்சி!''
பரிமாறுபவர்கள் இன்னும்
ாஞ்சம் இன்னும் கொஞ்சம்
ன்று வற்புறுத்துகின்றனர்.
ண்பவர்கள் இனி முடியாது
னி முடியாது என்று தலையை
வகமாக ஆட்டுகின்றனர்.
வர்கள் முகத்திலே அறுசுவை
ண்டியை ஆர்வத்துடனும் திரு
தியுடனும் உண்டு முடித்த
ளிப்பு கூத்தாடுகிறது. ஒவ்
வொருவர் எதிரேயும் நீண்ட
ாழை இலைகள். அதில் பரி
றப்பட்ட கறிகளோ பல
கை, தயாரிப்போ அற்புதம்.
வின் தரமோ மிக நேர்த்தி.
ரிமாறும் தோழர்கட்கோ
னிய முகத்துடனும் மகிழ்ச்சி
ம்பும் மனத்துடனும் அணி
ணியாக அமர்ந்து சாப்பிடும்
ந்த ஆயிரமாயிரம் நண்பர்
ளைக் காணக்காணப் பூரிப்பு.
ரிமாறுபவர்கள் உணவை மட்
மா பரிமாறுகின்றனர்? இல்லை!
ன்சொல்லைப் பரிமாறுகின்ற
. அன்புமொழிகளைப் பரி
றுகின்றனர். அனைவரும்
ழுத் திருப்தியோடு உண்ண
ண்டும் என்ற தம் ஆர்வத்
ப் பரிமாறுகின்றனர். தம்
ளத்தை உணர்ச்சியை ஊக்
தை உற்சாகத்தைப் பரிமாறு
றனர். எனவே உண்ணும்
ழர்கள் வெறும் உணவை மட்டும் உட்கொள்ளவில்லை அன்பு எனும் நறுந்தேனையும் உணவில் இட்டுப் பிசைந்து அள்ளி விழுங்கலாயினர்.

ஓகோ! எப்போதோ, 1939க்கு முன், போர் வாடை வீசாத காலத்தில், எங்கோ நடந்த அரிய விருந்தை விவரிக்கிறீரோ என்று நீங்கள் கேட்கக்கூடும். இல்லை! 1939க்கு முன் நடந்த விருந்தல்ல இது. 1948ல் நடந்ததுதான்.

எங்கோ, பங்கீடு இல்லாத பிரதேசத்தில், அளவரிசித் தொல்லையைக் காணமுடியாத இடத்தில் விருந்து நடந்திருக்கக்கூடும் என்பீர்கள். அதுவுமில்லை. பங்கீடு உள்ள இடத்தில்தான், எட்டு அவுன்ஸ் அரிசி அளந்து தரப்படும் இடத்தில்தான் நடந்தது.

சரி சரி! அப்படியானால் யாரோ ஒரு ஜமீந்தார் அல்லது மிராஸ்தார் அல்லது ஒரு அழகப்பா அல்லது ஒரு ராஜாசர் அல்லது ஒரு சிங்காரச் சிற்றரசர் வீட்டுத் திருமண விருந்தாயிருக்கும் என்று நீங்கள் கூறக்கூடும். அதுவும் உண்மையல்ல. அன்னக் காவடிகள் பல்லாயிரவர் கூடிய இடத்தில், அன்னக்காவடிகள் அன்னக்காவடிகளுக்குப் பரிமாறிய விருந்து இது.

ஆம்! தூத்துக்குடி மாநாட்டு விருந்துதான் இது. சென்ற கிழமை **கப்பலோட்டிய மாவீரன்** பிறந்த மண்ணிலே நடந்த திராவிடர் மாநாட்டுக்கு வந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் மாநாடு நடந்த இரண்டு நாட்களும் பரிமாறப்பட்ட அரிய விருந்துதான். விருதுநகரிலிருந்து வந்திருந்த நாடார் தோழர்களின் கைவண்ணம் தான், ஆயிரமாயிரம் திராவிடரிடமிருந்து சபாஷ் என்ற பட்டத்தைத் தட்டிப் பறித்த இவ் விருந்து.

ஒரே சமயத்தில் 5000 பேர் சாப்பிடக் கூடிய பெரியதோர் உணவுப் பந்தலை நிர்மாணித்த தோழர்கள், ஐந்தே நிமிடங்களில் ஒரு பந்தி சாப்பிட்டு முடிக்கக்கூடிய அளவுக்கு மிக மிக விரைவாகவும் ஒழுங்காகவும் அன்புடனும் பரிமாறிய மாநாட்டுத் தொண்டர்கள், "இலை போட்டாய்விட்டது, எல்லோருக்கும் குவளை வைத்தாய்விட்டது. சோறு பரிமாறத் தொடங்குங்கள். ஊம். ரெடி! ஒன். டூ. த்ரீ" என்று சொல்வது போல இலை போட்டு, டம்ளர் வைத்து முடித்ததும், குறிப்பிட்ட விநாடியில் குறிப்பிட்ட முறையில் 'விசில்' கொடுக்கத் தவறாத தொண்டர் படைத் தலைவர்கள், இவ்வளவு அருமையான முறையில் உணவு ஏற்பாடுகளைச் செய்து வைத்த மாநாட்டு நிர்வாகிகள், இத்தகைய ஏற்பாடுகள் அவ்வளவும் ஒழுங்காகவும் முறையாகவும் நடப்பதற்குத் தங்களுடைய முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தாராளமாகத் தந்துதவிய தூத்துக்குடி பொதுமக்கள் ஆகிய இவர்களில் யாரைப் புகழ்வது யாரை விடுவது என்பது உண்மையிலேயே மிக மிகச் சிக்கலானதோர் பிரச்சினைதான்.

உணவுப் பகுதி மட்டுமே அல்ல, மற்ற மாநாட்டு ஏற்பாடுகள் ஒவ்வொன்றுமே தூத்துக்குடி மாநாட்டுக்குத் தனிப் பெருமை தரத்தக்க சிறப்புடையனவாகவே இருந்தன. ஒன்றரை லட்சம் திராவிடர்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டு கம்பீரமாக நின்று கொண்டிருந்த—75000 சதுர அடி பரப்புள்ள அந்த மாபெரும் பந்தலும், பந்தலின் வடகோடியில் அமைந்திருந்த அழகிய மேடை

யும், அதன் முன்னே பேச்சாளர்கள் நின்று பேச என்றே அமைக்கப்பட்டிருந்தகிளிக்கூண்டும், பந்தலின் நுழைவு வாயிலின் தலைப்பில் திராவிடநாட்டை அமைத்து, அதன் நடுவே புன்முறுவல் பூத்த முகத்துடனே நிற்கும் பெரியார் உருவம் அமைத்து, மின்சார விளக்குகளால் அதனை ஒப்பனை செய்திருந்த சிறப்பும், தாய்மார்கள் பகுதியில் குழந்தைகள் குடிக்கப் பாலும் படுக்க ஏணைகளும் உடனுக்குடன் தரப்பட்ட காட்சியும், வெளியூர்த் தோழர்கள் தங்கவும் குளிக்கவும் உறங்கவும் செய்யப்பட்டிருந்த இட வசதிகளும், தண்ணீர் வசதிகளும், நண்பர்களின் உபயோகத்திற்காக என்று ஆயிரக்கணக்கில் மாநாட்டுப் பந்தல் ஓரங்களில் குவித்துவைக்கப் பட்டிருந்த பாய்களின் திரளும் பிறவும் மாநாட்டிற்கு வந்திருந்த திராவிடர்கள் என்றுமே மறக்க முடியாத மாட்சி படைத்தவை என்பதை யாரும் மறக்க முடியாது.

"தூத்துக்குடி மாநாடு இதுவரை யாரும் நடத்தாத முறையிலும் இனி யாராலும் நடத்தப்பட முடியாத முறையிலும் அவ்வளவு சிறப்பாக நடத்தப்படும்" என்று மாநாட்டுச் செயலாளர் கே. வி. கே. சாமி மாநாடு நடப்பதற்கு முன்னர் பத்திரிகைகளுக்குச் சேதி விடுத்தபோது, "இதெல்லாம் வெறும் கதை. அப்படி என்ன தூத்துக்குடிக்கு மட்டும் மூன்று கொம்பும் மற்ற ஊர்களுக்கெல்லாம் இரண்டு கொம்புமா முளைத்திருக்கின்றன" என்றுதான் எல்லோரும் கேலி பேசினோம். ஆனால் இப்போதல்லவா தெரிகிறது அவர் சொன்ன அந்த வாசகம் நூற்றுக்கு நூறும் உண்மை என்பது!

* * * *

தூத்துக்குடி மாநாட்டின் வெற்றிக்காக ஓயாதுழைத்து வந்த நண்பர்கள் நீதிமாணிக்கம், வள்ளிமுத்து, வி. வி. தனுஷ்கோடி ஆகியோருக்கும் இரவு என்றும் பாராது, பகல் என்றும் பாராது, கடுமை என்றும் பாராது, எளிமை என்றும் பாராது தூத்துக்குடி முழுவதும் பம்பரம்போல் சுழன்று சுழன்று மாநாட்டுப் பணியாற்றி வந்த அந்த ஓய்வறியாத உழைப்பின் உருவங்களாகிய ஹார்வி மில் தொழிலாளத் தோழர்கட்கும் திராவிடப் பெருங்குடி மக்களின் நன்றி என்றும் உரியதாக.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தலைவர்: சும்மா இருங்க. சும்மா இருங்க. பதறாதிங்க. நடந்ததைப் பத்தி கவலைப் படாதிங்க. அதனாலே ஒண்ணும் முழுகிப்போயிடாது. நான் கூட ஒரு காலத்தில் பார்ப்பன அடிமையாய் இருந்து வேலை செய்தவன்தான். இப்பத்தான், மாறி, இப்படி இன எழுச்சித் தொண்டு செய்து வருகிறேன்.

ரங்க: ஐயா என்னையும் அந்தத் தொண்டிலே சேத்துக்குங்கோ. என்னையும் சேத்துக்குங்கோ. இனி நான் உண்மையாய் உறுதியாய் நம் திராவிட இனம்வாழ, நம்மவர்கள் நன்மை பெற தொண்டு செய்வேன். நிச்சயம் செய்வேன். நீங்க சந்தேகப் படலாம் இவன் மதுரையில் தீ மூட்டினவன்தானே! இந்த இன உணர்ச்சி இப்படியே நிலைக்குமா என்று. ஆமாம்! இந்த ரங்கசாமியின் கரம் மதுரையில் தீ மூட்டிய கரம்தான். நம்திராவிட மாநாட்டுப் பந்தலுக்குத் தீ மூட்டிய கரம்தான். நம் தாய்மார்கள் இருக்கிறார்களே, நம் தோழிமார்கள் இருக்கிறார்களே, நம் அண்ணன் தம்பிகள் இருக்கிறார்களே என்பதைச் சிறிதும் எண்ணாமல் இரக்கமின்றி தீ மூட்டிய கரம்தான். கருஞ்சட்டைத் தோழர்கள் வருந்த வருந்தத் தீ மூட்டிய கரம்தான். ஆனால் இனி இனி என்ன? இனியும் தீ மூட்டும் இந்தக் கரம். இனி ஆரிய ஆணவத்திற்குத் தீ மூட்டும். வைதீக வெறியாட்டத்திற்குத் தீ மூட்டும். பத்தாம் பசலிகளின் உள்ளத்திலே உள்ள பழமைப் பித்துக்குத் தீ மூட்டும். •வர்ணாஸ்ரம வல்லரசுக்கு, பார்ப்பனீயப் புரட்டுக்கு, பாதகர்களின் பஞ்சாங்கத்திற்குத் தீமூட்டும்.

[சட்டென்று தன் நினைவு வ
வராய்] ஐயா மன்னிக்கணும்
கள் எதிரில் ஆத்திரத்தின் மி
யால் ஏதேதோ சொல்லிவிட்டே

[தமிழர் தலைவர் புன்ன
யுடன் அமர்ந்திருக்க, ரங்கச
வணக்கம் தெரிவித்துவி
வெளியே செல்கிறார்]

காட்சி 5

இடம்: மதுரை அக்கிரகாரம்

பாத்திரங்கள். விருத்தாப்
அய்யர், பஞ்சநதம் சாஸ்திரிகள்

காலம்: தூத்துக்குடி மா
டிற்கு இரண்டு நாட்கள் பொறு
ஓர் இரவு.

சாஸ்திரிகள்: என்ன அய்
வாள் சும்மா உட்கார்ந்திருக்
முகத்திலே எள்ளும் கொள்
வெடிக்கிறதே என்ன சமாசா
நம்ம ஆச்சாரியார் கவர்னர் ஜெ
ரல் ஆயிட்டோர். இந்த நல்ல
யத்தில் அபசகுனம் மாதிரி
கார்ந்திருக்கேர். காரணம் எ
அய்யர்வாள்.

அய்யர்: ஆச்சாரியார் கவ
ஜெனரல் ஆயிட்டா நேக்கு எ
லாபம் கொட்றது! அவரு
தான் அதிர்ஷ்டம் கூரையைப்
பிண்டு வந்து கொட்டரது. ே
கும் நேக்கும் எங்கே வ
மூதேவி ஜாதகம்தானே
இருக்கு நமக்கு.

சாஸ்திரி: பதறுதேயும்.
ளப் பேசும். சூத்திரப் ப
யாராச்சும் கேட்டுடப்போறா.
ஓய் உமக்கு மந்திரிப் பதவி
லேன்னு கோபமா ஓய் உமக்

அய்யர்: அட சட்! அ
ஓய். இந்த ரங்கசாமி இருக்
இல்லே இவன் அந்த தூ
குடிக்கி போய் அந்த நாய்
கிட்ட எல்லாத்தையும் ஒ
கொட்டி இருக்கான் ஓய்.
நினைச்சா நேக்கு ஆத்திரம்
ரமா வர்ரது ஓய்.

சாஸ்திரி: அதுக்கு நாம் எ
ஓய் செய்யறது? காலம் கெ
போச்சு. சூத்திரப் பசங்க
லாம் முழிச்சிக்கிட்டான்க.
நாய்க்கன் ஓயாம சத்தம்
டுப் போட்டு அதுகளை எழுப்
டுட்டான். அதுக முழிச்சி
எழுந்து நம்ம மேலே 'வள்
விழுதுகள். ரங்கசாமி
ஓய், பட்டை பட்டையா
பூசிகிட்டு, கார்த்திகை
இருந்துகிட்டு, சுப்ரமண்ய
ராட்டும் வேஷம் போடறே

(8-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

...த் தொண்டர்கள் ஏராளமானவர் எங்களைச் சூழ்ந்து கொண்டு இப்படி வாருங்கோ அண்ணாச்சி என்று எப்படி எப்படியோ வழி காட்டி எங்களை மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் சென்றனர். அடேயப்பா! எமகாதகர்கள் அத் தொண்டர்கள்! எங்களை அப்படி இப்படி அசைய விடவில்லை. நேரே பந்தலுக்கு அழைத்துச் சென்று, பார்த்தீர்களா எங்கள் ...க வேலையை என்று கேட்கும் பாவனையில் எங்களை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, உடனே மடமடவென கைபிடித்து இழுத்துச் சென்று குளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல்வேறு இடங்களைக் காட்டி, குளிச்சிங்கோ அண்ணாச்சி என்று "கட்டளை"யிட்டனர். குளித்தோம். (சென்னை வாசியாகிய நான் கூட குளித்தேன் அந்த மாலைநேரத்தில்!) சாப்பிடுங்கள் என்றனர். சாப்பிட்டோம். இங்கே தங்குங்கள் என்றனர், சொன்ன இடத்தில் தங்கினோம். பந்தலில் கொஞ்சம் வேலை இருக்கிறது அண்ணாச்சி என்றனர். போய் வாருங்கள் என்றோம், மகிழ்ச்சியோடு. (எவ்வளவு நேரம் தான் அவர்கள் இட்ட வேலையைச் செய்யும் அடிமைகளாக இருப்பது!)

பொழுது புலர்ந்தது!

தூங்கினோம். எழுந்தோம். பொழுது புலர்ந்தது! கீழ்த்திசை வானத்தில் ஞாயிறு தோன்றினான். ஒளி பரப்பினான். அந்த ஒளி மிசை மிதந்த வண்ணம் நகரை ஒருமுறை பவனிவந்தோம். விடியற் காலையிலேயே பந்தலிலிருந்து ஒலி பெருக்கி வேலை செய்யத் தொடங்கிவிட்டது. இந்த இடத்தில் குளியுங்கள், அந்த இடத்தில் சாப்பிடுங்கள், அந்தப் பக்கம் போகாதீர்கள், அந்தப் பக்கம் போய்வாருங்கள், இத்தனை மணிக்குள் மாநாடு, இத்தனை மணிக்குள் பகல் உணவு என்று ஓயாமல் அறிவிப்புகளை அளித்துக் கொண்டிருந்தது அந்தஒலிபெருக்கி. அந்த ஒலிபெருக்கியின் குரலோசை மக்கள் செவிக்கு எட்டாதுஎன்றோ என்னவோ மோட்டார் வண்டி ஒன்று ஒலிபெருக்கியைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு எங்கும் பின் தொடர்ந்து வரத்தொடங்கிற்று.

நகர் எங்கணும் அலங்காரத் தோரணங்கள்! வரவேற்பு வாக்கியங்கள்! புத்துலகச் சிற்பியே புரட்சித் தலைவரே வருக வருக! வருங்காலத் திராவிடத்தை உருவாக்கும் இளந்தோழர்களே தோழியர்களே வருக வருக! தூங்கிடும் தமிழகத்தைத் தட்டி எழுப்பிடும் தளபதிகளே வருக வருக! என்பன போன்ற சொற் சித்திரங்கள்! இவற்றைக் கண்டு களித்தவாறு வீதியில் "பவனி" வரும் காளைகள், கன்னியர்கள், பார்க்கும் இடம் எல்லாம் கருப்புச் சட்டைகள், சேலைகள்! பொழுது புலர்ந்துங்கூட தூத்துக்குடியில் இருள் நிறைந்திருந்தது. காரணம், கருப்புச் சட்டைகள் நகர் முழுவதும் நிரம்பி வழிந்திருந்தன.

பம்பாய், பூனா, டில்லி முதலிய வடநாட்டுப் பகுதிகளிலிருந்தும், இலங்கை பர்மா மலேயா சிங்கப்பூர் முதலிய வேற்று நாட்டுப் பகுதிகளில் இருந்தும், மைசூர் மலையாளம் திருவாங்கூர் கொச்சி முதலிய இடங்களிலிருந்தும் திராவிட நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த மக்கள் தூத்துக்குடி தெருக்களில் இன்பத் திராவிடமே எமது இலட்சியம் என்ற கீதம் இசைத்த வண்ணம் உலவிடலாயினர். **அகிலும் தேக்கும் அழியாக் குன்றம், அழகாய் முத்துக் குவியும் கடல்கள், முகிலும் செந்நெல்லும் முழங்கு நன்செய், முல்லைக்காடு மணக்கும் நாடு எங்கள் திராவிடம்** என்று சிலர் கூற, "அல்ல! அல்ல! **ஆற்றில், புனலின் ஊற்றில், கனியின் சாற்றில், தென்றல் காற்றில் நல்ல, ஆற்றல் மறவர் செயலில், பெண்கள் அழகில், கற்பில்சிறந்த நாடு திராவிடத் திருநாடு**" என்று வேறு சிலர் மறுப்புரை வழங்க, "எம் உரை கேளீர். எது சரி என்று நீர் பிறகு சிந்தித்துப் பாரீர், **புனலிடை மூழ்கிப் பொழிலிடை உலவிப் பொன்னுர் இழையும் துகிலும் பூண்டு கனி மொழி பேசி இல்லறம் நாடும் காதல் மாதர் மகிழுறும் நாடப்பா திராவிடம்**" என்று மற்றுமோர் கூட்டம் இன்னிசை இயம்ப, **தமிழ் நாடு தமிழர்க்கு; தமிழர் நாட்டில் சனியாக வந்துள்ள ஆரியர்கள் நமர் அல்லர்; நம் பகைவர் அந்நாள் தொட்டே; நமையே நாம் நம்பிடுவோம்** என்று சொல்லும் மாவீரர் பெரியார் பிறந்த பொன்னாடு நம் நாடு என்று ஒரு சாரார் உயரிய மொழி கூற, இன்பத் திராவிடம் நம்முடையநாடுஎன்று தினம் தினம் நீ இதைப் பாடுஎன்று அணி வரும் களிப்புச் சிந்து பாட, வீதி உலாமுடிந்து,மக்கள்பந்தலுக்கு வந்தனர். ஊர்வலம் புறப்படுகிறது என்று ஒலி பெருக்கி கூறிடக் கேட்டு 'ஹார்வி மில்' பக்கம் சென்றனர்.

8. வெள்ளம்போல் தமிழர் கூட்டம்!

ஹார்வி மில் ஒருபுறம். எதிரே, நீலத் திரைக் கடலின் நிர்மல கீதம். ஓரத்தில் படகுகள், கலங்கள், கப்பல்கள், இவற்றின் வரிசை. அலைகடலுக்கருகே மற்றோர் கடல்—மக்கட் கூட்டம்!

(அன்னை நாகம்மையார்)

அந்த மக்கட் கடல் நடுவே சிங்க ஏறுபோல் வீற்றிருக்கும் பெரியாரைச் சுற்றிலும் தளபதிகள், தொண்டர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், தோழர்கள், தாய்மார்கள் இவர்களின் கூட்டம்! வெடி வெடித்தது! ஊர்வலம் புறப்பட்டது! ஒரு இலட்சம் எனும் தொகையை எட்டிப்பார்க்கும் அண்ணாவினது ஊர்வலத்திற் கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கை. கருஞ்சட்டை அணிந்த தோழர்கள் மட்டும் 50,000 பேருக்குக் குறையாமல் இருப்பர். அந்தப் பிரம்மாண்டமான ஊர்வலம் சிறிது சிறிதாக

கார்ந்து சென்று பகல் 11 மணி அளவில் மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது.

9. தொடங்கிற்று மாநாடு!

கடலுடன் கடல் கலந்ததுபோல, மாநாட்டுப் பந்தலில் முன்னமே செறிந்துமிடைந்திருந்த மக்கட் திரளுடனே ஊர்வலத் திரள் கலந்து, மானிட சமுத்திரம் நான் என்று கூவிற்று. பந்தலில் மட்டும் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் பேர். பந்தலைச் சூழ நின்றவர்கள் வேறு இருபத்தையாயிரம். பந்தலின் மேற்குப் பகுதி முழுவதும் திராவிட மாதரார் கூட்டம். எப்புறமும் இளங்காளைகளின் ஈட்டம். புரட்சித் தலைவர் பெரியார் வாழ்க என்ற முழக்கம் விண்ணைக்கிழித்துக் கொண்டெழுந்தது, அந்த வெண்தாடி வேந்தர் உள்ளே நுழைந்தபோது. புன்முறுவல் பூத்த முகத்துடனே அவர் மேடைக்குச் சென்றார், அந்தப் பெருங் கூட்டத்தை மகிழ்ச்சியோடு ஒருமுறை பார்த்தார், முப்பதாண்டுகட்கு முன்னே இரண்டொருவர் புடைசூழ காஞ்சிபுரம் மாநாட்டில் வெளியேறிய தன்னைச் சுற்றி இன்று ஆயிரமாயிரவர் ஆநந்தக் குரல் எழுப்பிக்கொண்டு நிற்கும் அதிசயக் காட்சியைக் கண்டார், என் அருந் திராவிடமே நீ வாழ்க என மொழிந்தார், உடலில் இருந்த நோயையும் மறந்தார்.

ஒல்லியான உருவமும் ஓய்வறியா உழைப்பும் முடுக்கான தோற்றமும் மறத்தமிழன் மாட்சியும் படைத்த அந்தக் கட்டிளங் காளை கே. வி. கே. சாமி முதலில் சில சொற்கள் கூறி மாநாட்டைத் துவக்கி வைத்தார். குடந்தை தளபதி கே. கே. நீலமேகம் கொடி ஏற்றியபின், திருச்சித் தலைவர் டி. பி. வேதாசலம் மாநாட்டுத் திறப்பு விழா ஆற்றினார். உலக நிலையையும் இந்திய நிலையையும் நம் நாட்டு நிலையையும் மக்கள் நிலையையும் நிரல் நிரலே அவர் விளக்கிக் காட்டினார்.

"கம்யூனிசம் சிறந்த இலட்சியம். அது உலக உத்தமர்கள் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்த உன்னதமானதோர் குறிக்கோள். அந்த இலட்சியத்தில் நமக்குச் சிறிதும் வேறுபாடு இல்லை. அதை நாம் முற்றிலும் ஒப்புக்கொள்கிறோம். நம் இயக்கத்தின் அடிப்படைத் தத்துவமும் அதுவேதான். ஆனால் இந்த இந்தியக் கம்யூனிசம் இருக்கிறதே இதைத்தான் நாம் பலமாகக் கண்டிக்கிறோம். இது கொள்கை இல்லாதது. திட்டம் இல்லாதது. உறுதி இல்லாதது. நமக்குச் சிறிதும் பயன்பட முடியாதது. ஆகவேதான் உண்மையில் கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த இந்திய கம்யூனிஸ்டுகளின் போக்கை கண்டிக்கிறோம், வெறுக்கிறோம், மறுத்துரைக்கிறோம்" என்றும், "நாமெல்லாம் திராவிடர்கள். நம் நாடு திராவிடநாடு. இதில் யாருக்கேனும் சந்தேகமுண்டா? உண்டானால், அப்படிச் சந்தேகப் படுபவர்களைப் பற்றி நாம் சந்தேகப்பட வேண்டுமே தவிர வேறில்லை." என்றும்,

மறைந்த மன்னர் பன்னீர் செல்வம்

"மொழிவழி மாகாணப் பிரிவினை என்ற கருத்து ஏற்கெனவே நடைமுறைக்கு வரத் தொடங்கி விட்டது, ஆம்! நம் இலட்சியத்தின் முதற் பாகம் நிறைவேறிவிட்டது. பிரிந்த இம் மாகாணங்கள் இணைந்து நின்று கூட்டாட்சி அமைப்பது எப்படி என்பதுதான் இனி நாம் தீர்த்துக்கட்ட வேண்டிய பிரச்சினை. இது நம் இலட்சியத்தின் இரண்டாம் பாகம். இந்தப் பாகத்தையும் நிறைவேற்றி வைக்க இளைஞர்களே முரசு கொட்டி முன்னேறி வாருங்கள்." என்றும் தலைவர் வேதாசலம் அவர்கள் அவருக்கு இயல்பாய் அமைந்துள்ள அந்த இனிய எளிய வார்த்தைகளால் எடுத்துக் கூறியபோது, மாநாடு, ஆம்! ஆம்! எனக் கையொலி செய்து அவர் உரையின் உண்மையை ஒப்பிற்று.

பிற்பகல், மாநாட்டின் தலைமையை ஏற்றார் பெரியார், அவரை முன்மொழிந்தும் பின்மொழிந்
குடந்தை சின்னத்தம்பி, திருப்
சுப்ரமண்யம், சென்னை
கோவிந்தசாமி, வேலூர் திருநா
கரசு, சேலம் ஜகதீசன், பட்
கோட்டை அழகர்சாமி, திண்
கல் மத்திரன், திருஒற்றியூர்
சண்முகம் முதலான பலர் பே
னர். ஆனால் அவர்கள் பே
அத்தனையையும் தேவையற்றத
ஆக்கிவிட்டார் நடிகவேள் ரா
அவர் மாநாட்டை நோக்கி வி
ஒரே ஒரு வாக்கியத்தின் மூ
ராதா சொன்னார்: "நான்
யாரை முன்மொழியவோ வழி
யவோ போவதில்லை. ஏனெ
அது தேவையில்லை. பெரியார்
நம் தலைவர். இன்றாட்டும
என்றைக்குமே அவர்தான் நம்
வர். அவர் உயிருடன் உள்ள
யில் மட்டுமல்ல அவர் மறைந்த
னருங்கூட அவர்தான் நம் த
புரட்சிக்கொள்கை என்ற பூ
உள்ள நாள் வரைக்கும் அவர்
தலைவராயிருக்க முடியும்."
அதுதான் உண்மை! பெரி
பிறவியிலேயே தலைவர். த
தலைவர். திராவிடர் தந்தை.
மான இயக்கத் தலைவர்.

சிலர் தலைவர்களாய்ப் பிறக்
கள். சிலர் தலைவர்களாக ஆ
படுகிறார்கள். சிலர் தலைவர்க

ர்கள். பெரியார் இரண்டா வரிசையைச் சேர்ந்தவரல்ல; ருவது வரிசையினருல்ல வரிசையினர்! ஆகவேதான் கூறினார் அவரைத் தலைவ இருக்கவேண்டுமென்று முன் ழிவதும் பின் மொழிவதும் ம் கேலிக்கூத்து என்று.

ரியார் ஆற்றிய பேருரை ன் அன்றைய மாநாடு முடிந்

படங்கள் திறந்தன!

மறுநாள் 9-5-48 ஞாயிறு காலை ம் மீண்டும் கூடியபோது, ர் அறுத்தனம், "அயர்லாந் யாளர்கட்கு டரன்ஸ் மாக்ஸ் எப்படியோ, வங்காளிகளுக்கு சித்ரஞ்சன் தாஸ் எப்படியோ, நாட்டுத் தேசியவாதிகட்குத் பூர் குமரன் எப்படியோ, படித்தான் நமக்கு தாளமுத்து சர்கள்" என்று கூறி, தங் உரிமைக் கொடுத்து தமிழைக் அந்த வீரர்தம் உருவப் படத்தைத் திறந்துவைத்தார். ம் இவர்கள்தம் படத்தைத் துவைப்பது பிணத்தைக் ஒப்பாரி வைப்பதற்கல்ல; வேட்டை ஆடுவதற்கல்ல; த் தியாகிகளின் குடும்பங்க ஐந்து ஏகர் நிலம் கொடுங் என்று சர்க்காரைக் கேட்ப ல்ல; இவர்களை வீழ்த்திய ட்டத்தைக் காட்டி நமக்குச் வாக்குத் தேடவுமல்ல; இவர் போன்ற வயிரம் பாய்ந்த சிந்தைக ஒவ்வொரு திராவிட வாய் வேண்டும் என்பதற்கா ன்." என்று அவர் கூறிடக் ட்டபோது அண்ணவர் நெஞ்சிலும் முத்தும் நடராசனும் நடமா தொடங்கினர். அல்ல! ஒவ் ரும் ஒவ்வொரு தாளமுத் நடராசனாக மாறினர்.

போராடிய வீரத் தமிழன் சி. படத்தை விடுதலை ஆசிரி குருசாமி அவர்களும், அண்ணா மையார் படத்தை குஞ்சிதம் மையார் அவர்களும், ஓமான் க்கு இரையாகி மறைந்து உத்தமர் செல்வம் படத்தை கே. வி. அழகர்சாமியும் நடராசன் படத்தை தோழர் தம்பியும் திறந்துவைத்த ர், பெரியார் அவர்கள் காங் மறைவு பற்றிய பல அரிய மைகளை எடுத்துக்கூறி அன் னார் படத்தைத் திறந்துவைத்தார் கள்.

சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, மா. இளஞ்செழியன், என். வி. நடராசன் நால்வரும சிறிது நேரம் பேசிய பிறகு மாநாடு இடை வேளைக்குக் கலைந்து கூடிற்று.

11. தூத்துக்குடி துந்துபி!

திராவிடத் தனியரசே திராவிட ரின் முடிவான இலட்சியம், இந்திய அரசியல் ஆக்கமன்றம் திராவிட ரைக் கட்டுப்படுத்தாது, இந்தி

கே. வி. கே. சாமி

"தமிழ்நாடு நம்ம கைக்கு வந்தால் கவர்னர் வேலைகூட தரலாம் சாமி அவர்களுக்கு. அவ்வளவு அருமையான முறையில் அவர் இந்த மாநாட்டை நிர்வகித்திருக்கிறார்......"

—தூத்துக்குடி மாநாட்டில், பெரியார்.

மொழி திராவிடத்தில் எவ்வுருவி லும் நுழைதல் ஆகாது, கருஞ்சட் டைப் படைத் தடை உடனே நீக் கப் படல் வேண்டும் என்ற நான்கு முக்கிய தீர்மானங்களும் கட்சிக் கொள்கைகள், நடைமுறைகள், வேலைத் திட்டங்கள், பிரசாரம் தொடர்பான வேறு பல தீர்மானங் களும் மாநாட்டில் பிற்பகல் நிறை வேறின. ஆந்திர கன்னட மலை யாளப் பகுதிகளிலும் திருவிதாங் கூர் கொச்சி தனியரசுகளிலும் கழகப் பிரசாரம் நடத்துவதற்கான திட்டமும் தீட்டப்பட்டது.

தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபிறகு அவற்றைத்தொகுத்தும் வகுத்தும் பிரித்து விளக்கியும் இரண்டு மணி நேரம் விரிவுரை ஆற்றினார் பெரியார்.

இரவு, நடிகவேள் ராதாவின் "சர்வாதிகாரி" நாடகம்.

தூத்துக்குடி மாநாட்டிற்கு அழ கானதோர் முடிவுரைபோல் அமைந் தது ராதாவின் நாடகம். நடிகர் ராதாவின் கருத்துள்ள நடிப்பும் சுவையான உரையாடல்களும் சிந் தனையைத் தூண்டும் சிறப்புடை யனவாய் இருந்ததோடு, நாடகம் பார்த்த எல்லோரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தது. சிரித் துச் சிரித்து, பழங்காலக் கோட் பாடுகளையும் செல்லரித்த ஏற்பாடு களையும் கண்டு சிரிக்கத் தொடங் கினர் மக்கள். ராதா நாடகமே, ஒரு மாநாடு. ஆம்! அதன் பண் பும் பயனும் அத்தன்மையதாகத் தான் இருந்தது.

திங்கட்கிழமை ரயில்வே தொழி லாளர்கள் வேலைநிறுத்தம். ஆகவே ஊர் திரும்ப முடியாமல் தூத்துக் குடியிலேயே தங்கிவிட்டனர் மக் கள். திங்கள் இரவு எட்டு மணிக்கு மேல் திடீரென்று பந்தலுக்கு வந்து ஒரு மணி நேரம் மக்களுக்கு அறி வுரை வழங்கினார் பெரியார். அவ ரைத் தொடர்ந்து தோழர்கள் குரு சாமி, நடராசன் ஆகியோரும் பேசினர்.

திங்கள் இரவும் செவ்வாய் பக லும் தூத்துக்குடி, வெளியூர்தோழர் களிடமிருந்து பிரியா விடைபெற்று க்கொண்டிருந்தது. பெரியார் செவ் வாய் முடிய தூத்துக்குடியிலேயே தங்கி, ஒவ்வொரு ரயில் புறப்படும் போதும் ரயிலடிக்கு வந்து, மக்க ளுடன் உற்சாகமாக உரையாடிக் கொண்டும் அவர்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டும், இடுக்கண் வருங்கால் நகுக என்ற வள்ளுவர் வாய் மொழியை அவர்கட்கு எடுத் துக் காட்டிக் கொண்டும், போய் வருகிறீர்களா என்றுபொன்மொழி புகன்று கொண்டும் இருந்தார். உடலிலே அவருக்கு நோய். ஆனால் உள்ளத்திலோ, அந்த நோயை முறித்துத் தள்ளும் அளவுக்கு உற்சாகம். அந்த நீண்ட பயணத் தால் காளைகள் கிழவரெனக்

களைத்து நின்றனர் பலமுறை. ஆனால் அந்தக் கிழவரோ காளையென நிமிர்ந்து நின்றார் தூத்துக்குடியில்! "உங்களைப் பார்த்த பிறகு, உங்கள் உள்ளத்தில் ஊறியெழும் உற்சாகத்தையும் உணர்ச்சியையும் பார்த்த பிறகு, என்று போர் ஏன் தாமதம் என்று கேட்ட வண்ணம் நிற்கும் உங்கள் துடிதுடிப்பைப் பார்த்த பிறகு எனக்கிருந்த நோய் பறந்தே போய்விட்டது" என்று பெரியார் மாநாட்டில் குறிப்பிட்டாரே அது வெறும் சொல் அடுக்கு அல்ல, உண்மை! உண்மை என்பதைத்தான் காட்டிற்று அவர் மாநாடு நடந்த நாட்களிலும் அடுத்த இரு நாட்களிலும் அங்கும் இங்கும் சுற்றிச் சுழன்று மக்களின் சுகத்தை நாடியதும், அவர்கட்குப் பல வசதிகள் தேடியதும், மாநாட்டு ஸ்டால்களைச் சென்று கண்டதும், உணவுப் பந்தலுக்கு திடீரென வந்து மக்கள் உண்பதைக் கண்டு களித்ததும், உண்டபின் ஓய்வாக மக்கள் உட்கார்ந்திருந்த வேளையில் அவர்களுடன் வந்து கொஞ்சியதும், பிறவும்! எழுபதாண்டுக் கிழவராகவா இருந்தார் அவர்? இல்லையே! முப்பதாண்டுக் காளைபோல் அல்லவா அவர் மாநாட்டில் பணியாற்றினார்! அப்பப்பா! அவருக்குத்தான் இந்த மக்களுக்குத் தொண்டாற்றுவதிலே என்ன உற்சாகம்! எவ்வளவு ஊக்கம்! எத்துணை மகிழ்ச்சி! எத்துணை மகிழ்ச்சி! சென்ற முப்பதாண்டுகளாக அந்த அறிவின் செல்வர் காட்டிய ஊக்கத்தின், உற்சாகத்தின், உறுதியின், உத்வேகத்தின் கூட்டுத் தொகுதிதானே அத் தூத்துக்குடி துந்துபி!

12. தூத்துக்குடிக்குப் பிறகு....!

"சென்னையில், கட்சி, நம்மிடம் வந்தது. சென்னைக்குப் பிறகு திருவாரூர், திருவாரூருக்குப் பிறகு சேலம், சேலத்திற்குப் பிறகு திருச்சி, திருச்சிக்குப் பிறகு தூத்துக்குடி என்று ஒவ்வொரு முறையும் நாம் புதியதோர் அத்தியாயம் துவக்கியேவந்திருக்கிறோம்" என்றார் பெரியார், தம் முடிவுரையில். நம் செல்வாக்கு எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதற்கு தூத்துக்குடி ஓர் அளவுகோல். மாநாட்டிற்கு மாநாடு நம் இயக்கம் படிப்படியே வளர்ந்திருக்கிறது—வளர்ந்தது மட்டுமல்ல—புதுப்புது துறைகளில் புகுந்திருக்கிறது; புதுப்புது வெற்றிகளைப் பெற்றுமிருக்கிறது. இன்று தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்திருக்கிறது, சுதந்தரத் திராவிடம் எனும் கப்பலோட்ட! கப்பல் ஓட்டப்படும்—நிச்சயமாக, விரைவில்! தூத்துக்குடி, முன்னமே கப்பல் ஓட்டப்பட்ட இடம்! வ. உ. சிதம்பரனார் கலங்காத நெஞ்சுடன் நிமிர்ந்து நின்று சுதந்தரக் கப்பல் ஓட்டிய இடம் அது! ஆகவே அங்கு கப்பல்

தோழர்கட்கு!

22—5—48ல் வெளிவர வேண்டிய **போர்வாள்** வார வெளியீடு நிறுத்தப்பட்டுள்ளது. 29—5—48 சனி முதல் வழக்கம்போல் வெளிவரும்.

ஓட்டுவது எளிது. விரைவில்
கூடியது. நடத்திக்காட்ட
காது சிதம்பரனார் பரம்பரை

"இன்று தூத்துக்குடிக்
திருக்கிறோம்" என்று
விட்டு, பெரியார், "தூத்து
குப் பிறகு......" என்று
வாக்கியத்தைத் தொட
தொடங்கினாரோ இல்லை
மேடையின் ஒரு பகுதியில்
திருப்பூர் எஸ். ஆர். சுப்பி
யம்—நம் நண்பர், பெ
இருந்த பக்கம் குதித்தோடி வ
வந்து கூறினார் தூத்துக்கு
பிறகு கோவை என்று.
அவர் கோவைக்கு அழை
அடுத்த மாகாண மாநாட்டை
யையும் சென்னையும் கூட
தன. ஆனால் கோவைதான்
அழைத்தது. கோவையின்
புதான் ஏற்றுக்கொள்ளப்
என்றுபொதுவாகக் கப்பப்

தூத்துக்குடி இன்பத் திரா
நம் இலட்சியம் என்பதை வ
த்திவிட்டது; டில்லியில் உள்
சியல் ஆக்க மன்றம் நம்மை
டுப்படுத்தாது என்பதை
யோர் உணரக்கூறிவிட்டது
மலையாள கன்னட பகு
குச் செல்வது என்று புது
பட்டு அதற்கான திட்ட
வகுக்கப்பட்டுவிட்டது.
அடுத்தகட்டத்திற்கு நாம்
அழைத்துச் செல்ல வேண்டும்

சுதந்தரத் திராவிடம் எ
கட்டிடத்திற்கான கால்கோள்
தூத்துக்குடி மாநாடு! க
திறப்பு விழா கோவையில்
கும் என எதிர்பார்க்கப்படு
நடக்கட்டும். நடக்
கோவைத் தோழர்கள்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு. அந்தக் கூட்டாளிக்கு மூலதனத்திலும் லாபத்திலும் பங்கு இருப்பது போல்தான் இந்தக் கூட்டாளிக்கும் இருந்து தீரவேண்டும்.

சர்க்காராலேயே எல்லா முக்கிய தொழிற்சாலைகளும் நடத்தப்படவேண்டும். அத்தகைய நிலை ஏற்படும்வரை, தொழிற்சாலைகளில், நான் குறிப்பிடும் மூலதனத்திலும் லாபத்திலும் பங்கு கொள்கை நடைமுறைக்கு வந்தாக வேண்டும்.

இந்த அடிப்படை பிரச்சினை தீர்க்கப்படும் வரை வேலை நிறுத்தங்களால் மட்டும் எந்த சிறந்த பலனும் ஏற்பட்டுவிடும் என்று நான் முடியவில்லை.

வணக்கம்

Edited, Priinted and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimol otFree Printers 147, Corsl Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B A.